உ

கடவுள்துணை.

செந்தமிழ்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் பிரசுரமாகும்
ஒரு தமிழ்ப்பத்திரிகை.

பத்திராசிரியர்.— { ரா. இராகவையங்கார்,
ஸேது ஸம்ஸ்தான வித்வான்.

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்—திருவள்ளுவர்.

தொகுதி-உ.] குரோதிஹு சித்திரைமீ [பகுதி-கூ.

உள்ளுறை.

ஔவையார்.—பத்திராசிரியர். கசுO
திருவாதவூரர் புராணம்.—அ. குமாரசுவாமிப்பிள்ளை. உOசு
சிலப்பதிகாரமணிமேகலைகளின்பிறப்பிடம் யாது?— } தா. பொன்னம்பலம்பிள்ளை. எம். ஆர். ஏ. எஸ். உகக
ஆகுபெயரன்மொழித்தொகை ஆராய்ச்சி.— } நா. வேதாசலம்பிள்ளை. உகஅ
அநுமானவிளக்கம்.—திரு. நாராயணையங்கார். சக
விவசாயரசாயனசாஸ்திரச் சுருக்கம்.—சே. ப. நரசிம்மலுநாயடு நுஎ
திணைமாலை நூற்றைம்பது.—கணிமேதாவியார். உசு
அட்டாங்கயோகக்குறள் வருத்தமறவுய்யும்வழி.— } சேற்றூர்ச் சுப்பிரமணியக்கவிராயர் க சு

மதுரை:
தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ-4.] 1904. [தனிப்பிரதி அணா-8.

ஊர்காவற்றுறை போலீஸ்கோட் நீதிபதியாயிருந்து இளைப்பாறி உபகாரச்சம்பளம் பெற்றுவந்த யாழ்ப்பாணத்து நல்லூர் **ஸ்ரீமத் கு. கதிரைவேற் பிள்ளையவர்கள்** தேகவியோகமடைந்த செய்திகேட்டுத் துயரடைகின்ரோம். நீதி, தயை முதலிய நற்குணங்களாலும், கல்வியறிவாலும், செல்வம், செல்வாக்கு முதலியவற்ருலுஞ் சிறந்துவிளங்கிய இவர்கள் நம்செந்தமிழ்க்கு வேண்டியவுதவிபுரிவதாக முன்வந்து வாக்குதவிய நம் சங்கவங்கத்தினருள் ஒருவராவர். பலதமிழ்வித்வான்களை ஆதரித்துப் பல செந்தமிழ் நூல்கள் வெளியிடுவித்தனர். தமிழிற்கு ஓர் பெரிய அகராதி யியற்றி வெளியிடப் பெருமுயற்சியெடுத்து அவ்வாறே அகரவரியளவில் முடித்துவெளியிட்டனர். இவ்வகராதி, பிள்ளையவர்களது தமிழ்க்கல்வித் திறனை நன்குவிளக்குவதாகும். இவ்வுத்தமரது சன்மார்க்க ஜீவியத்தில் யாதொரு மறுவுங்காண்டல் அரிதென்பர். இத்தகைச் சிறப்புவாய்ந்த பிள்ளையவர்கள், தமது புத்திரராகிய அட்வகட் பாலசிங்கமவர்களும் தமிழ்நாடும் புலம்ப விண்ணுலகமடைந்தது பெரிதும் விசனிக்கத்தக்கது.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-உ.] குரோதிஹ சித்திரைமீ [பகுதி-சு.

ஔவையார்.

இந்நல்லிசைப் புலமை மெல்லியலாரின் அருமைத் திருப்பெயர் இத்தமிழ் நாட்டின்கண் அறிவுக்கே பரியாய நாமம்போலச் சிறந்து தொன்று தொட்டே ஆண் பெண் இளையர் முதியர் என எல்லாரானும் வழங்கப்படுவதொன்று. ஓரோரினிய முதுமொழியை எடுத்தோதி அதனை 'ஔவை வாக்கு' என்னும் 'ஔவை வாக்குத் தெய்வ வாக்கு' என்றும் 'ஆயிரம் பிள்ளைப்பெற்ற ஔவையார்' என்றும் பலவாறாக வழங்குதல் இன்றைக்குங் காணலாம். ஈண்டு ஆயிரம் பிள்ளையென்றது இவர் பாடியருளிய பலவாய பாடல்களையே குறிப்பதாகும். 'செல்வப் புதல்வனே யீர்ங்கவியா' என்றார் பிறரும். ஆயிரம்—உபலக்கணம். இனிய எளிய தொடரில் அரிய பெரிய உறுதிகளை அமைத்து யாவர்க்கும் புலங்கொளவுரைப்பது இவர்க்கியல்பு என்பது 'அறஞ்செயவிரும்பு' 'அன்னையும் பிதாவு முன்னறிதெய்வம்' என்பன முதலாக இவரருளிச்செய்த அறவுரைகளாற் றெற்றென விளங்கும். இத்தகைக் கல்விவண்மையானன்றே இவரைக் கற்றாரேயன்றி மற்றாரும் எளிதினறிந்து பாராட்டுவாராயினர். இவ்வாறு யாவரும் பரவும் மேவருஞ் சிறப்பினையுடைய ஔவையாரென்னும் அருந்தமிழ்ச்செல்வரின் பெரிய வரலாற்றைப் பண்டைத் தண்டமிழ் நூல்களையே பெருந்துணையாக்கொண்டு யான் றெரிந்த அளவால் ஈண்டெடுத்தோதலுற்றேன்.

இவரது பிறப்பு வரலாற்றைப்பற்றி ஆராயுமிடத்துப் பழைய கதையொன்று காணப்படுவது. அஃதாவது "யாளிதத்தன் என்னும் பார்ப்பானொருவன் தன்னாலே பார்ப்பனி யெனக் கருதிக் கொள்ளப்பட்ட புலைச்சி யொருத்தியைப் புணர்ந்து கபிலர் முதலாக

எழுவர்மக்களை யிவ்வுலகிற்றந்தனன் ; அவருள் இவ்வௌவையாரும் ஒருவர் என்பது. இஃது இற்றைக்கு நானூறு வருடங்கட்கு முற்பட்டதென்று தெளியப்படுகின்ற ஞானமிர்த நூலுள் 'அறப்பயன் றீரின்' என்னும் அகவலுள் 'யாளி கூவற்றாண்டு மாதப் புலேச்சி, காதற்சரணி யாகிமேதினி, யின்னிசையெழுவர்ப் பயந்தோளீண்டே' என்பதனானும் இதனுரையுள் 'யாளிதத்தன் தனக்கு விகிர்தமாய்த் தன்னானே வெட்டுண்டு கிணற்றில் வீழ்த்தப்பட்ட அறிவில்லாத சண்டாளப்பெண்ணை ஓர் பிராமணன் எடுத்துக்கொண்டுபோய் உத்தரபூமியில் வளர்த்து இவளுக்கே பின்னர்க்கொடுக்க இவனுக்கு அவள் காதலித்த பார்ப்பனியாய் இந்நிலவுலகின் கண்ணே இனிய கீர்த்திபெற்ற கபிலர்முதலிய பிள்ளைகள் எழுவரையுங்குப் பெற்றுள்' எனக்கூறுதலானும் அறியப்பட்டது. இக்கபிலர் முதலாகிய எழுவர் இவரொன்பது,

கபில ரதிமான் காற்குறவர் பாவை
முகிலனைய கூந்தன் முறுவை—நிகரிலா
வள்ளுவ ரவ்வை வயலூற்றுக் காட்டிலுப்பை
*யெண்ணி லெழுவ ரிவர்.

என்னும் ஓர் பழைய வெண்பாவினால் நன்று தெளியப்படுவது. இவ்வெழுவருட் கபிலர் அதிகமான் வள்ளுவர் மூவரும் ஆண்மக்களெனவும் குறவர்பாவை முறுவை ஔவை உப்பை நால்வரும் பெண்மக்களெனவும் கூறுப. இவ்வெழுவர் மக்களுட் கபிலர் அதிகமான் வள்ளுவர் ஔவை என்னும் நால்வர் வரலாறுகளே பண்டைத்தமிழ்நூல்களான் ஒருவாறுணரப்படுவன. இவர்கள் பெயர் பொறித்துள்ள பழைய பாடல்கள் சிலவற்றாலும் பிறவற்றாலும் இந்நால்வரும் வேறு வேறு குடியினர் இடத்தினர் என்பது செவ்வனந் தெளியப்படுவது. "யானே பரிசிலன் மன்னு மந்தணன்" (புறம் உ00) 'அந்தணன் புலவன்கொண்டு வந்தனனே' (ஷ உ0க) 'புலனழுக்கற்ற வந்தணாளன்' (ஷ கஉசா) என்பனவற்றாற் கபிலர் அந்தணராவர். மழவர் பெருமகன் (ஷ அசா) 'அதியர் கோமான்' (ஷ கூக) என்பனவற்றால் அதிகமான் மழவரெனப் பெயரிய ஒருவகைவீரர் பாற்பட்ட அதியர் குடியினனவன். வள்ளுவனொன்னும் பெயரானும் 'தேவை

* எள்ளிலெழுவர் எனப்பாடங்கொள்ளினும் இழுக்காது.

மறந்தேயும் வள்ளுவனென்பானோர் பேதை' (திருவள்ளுவமாலை) என்பதனானும் 'கீழ்ப்பிறந்தார்' (மூதுமொழி வெண்பா) எனப்படுதலானும் வள்ளுவர் முரசறைந்து அரசாணை சாற்றும் முதுக்குடியினராவர். செய்தி சாற்றுதல் வள்ளுவர் குடித்தொழிலென்பது செய்தி வள்ளுவன் பெருஞ்சாத்தன் (குறுந்தொகை உ௨அ) என்னும் பெயரானுந் தெளியப்படும். இக்கபிலரதிகமான் என்னும் வெண்பாவானே இவ்வெழுவருள் ஒருவர் குறவர் குடியினர் என்பதும் அறியலாகும்.

இழையணிப் பொலிந்த வேந்துகோட் டல்குன்
மடவர லுண்கண் வாணுதல் விறலி
பொருநரு முளரோநும் மகன்றலை நாட்டென
வினவ லானாப் பொருபடை வேந்தே
யெறிகோ லஞ்சா வரவி னன்ன
சிறுவன் மள்ளரு முளரே யதாஅன்று
பொதுவிற் றூங்கும் விசியுறு தண்ணுமை
வளிபொரு தெண்கண் கேட்பி
னதுபோ ரென்னு மென்னையு முளனே (புறம்-அக).

இஃது அதிகமா னெடுமானஞ்சியை ஔவையார் சிறப்பித்துப் பாடியது. இப்புறப்பாட்டினை ஔவையார் தம் பெயர் கூறுமலே தம்மை வினவிய வேந்தற்கு விடையாகக் கூறியதெனக் கொள்ளலே ஏற்புடைத்தாகும். அங்ஙனம் கொள்ளின் ஔவையார் பாணர் விறலியர் கூத்தர் என்பவருள் விறலியர் என்னும் பகுதியினராவர். விறலியர்-விறல்பட ஆடலும் பாடலும் வல்லவர். இவர்க்குப் பாடலுஞ் சிறந்ததென்பது 'சேயிழை பெறுகுவை வாணுதல் விறலி, பாரி வேள்பாற் பாடினை செலினே' (புறம் க0ரு) என்னும் கபிலர் பாட்டானும் உணர்க. இவர் விறலியென்பதற்கேற்ப 'வாயிலோயே வாயிலோயே' என்னும் புறப்பாட்டினுள் (உ0சு) 'காவினெங் கலனே சுருக்கினெங் கலப்பை' எனத்தஞ்செய்தி கூறியவாற்றான் இவர் யாழ் முதலிய இசைக்கருவியுடையராதலேயும் அதிகமான் தூதுவிடத்தொண்டைமானுழைத் தூது சென்றமையினையும் (புறம் கூரு) ஈண்டைக்கு நோக்கிக்கொள்க. முற்காலத்துப் பாணர் கூத்தர் விறலியர் முதலியோரெல்லாம் கல்விகேள்விகள் நிரம்பினவராய்ச் சுவை

பெரிது பயப்பச் செய்யுள் செய்தலினும் வல்லவராயிருந்தனர். பாண்டியனொருவன் கழைக்கூத்துப் பார்க்குமிடத்துப் பராமுகமாகக் கூத்தாடினவள் கோபித்துக்கொண்டு விழுங்காற்பாடிய

மாகுன் றனையபொற் றோளான் வழுதிமன் வான்கரும்பின் [ப்
பாகொன்று சொல்லியைப் பார்த்தென்னைப் பார்த்திலன் பையப்பைய
போகின்ற புள்ளினங் காள்புழற் கோட்டம் புகுவதுண்டேற்
சாகின் றனளென்று சொல்லீ ரயன்றைச் சடையனுக்கே.*

என்னும் தமிழ்நாவலர்சரிதைப்பாட்டும் இக்கருத்தைவலியுறுத்தும்.

இனிக்கபிலர்† வாதவூரிற் பிறந்துவளர்ந்து பெரும்பாலும் பாரியுடைய பறம்பின்கண் வதிந்தனர். அதிகமான் தகடூரில் வதிந்தனன். வள்ளுவர் மயிலையிலும் கூடலிலும் வதிந்தனர். ஔவையார் பெண்ணையாற்றங்கரைக்கணுள்ள புல்வேளூரினும் அதியமானூரினும்திருக்கோவலூரினும் வதிந்தனர். மேற்காட்டிய கபிலரதிகமான் என்னும் வெண்பாவானே உப்பை யிருந்தது ஊற்றுக்காடென்பதும் உணரப்படும். இவ்வாறு குடியானும் இடத்தானும் வேற்றுமை பெரிதுடைய இவர்கள் ஒருடற்பிறப்பினரென்பது என்னையெனின்;— இவர்களைப் பெற்ற தந்தையுந் தாயுந் தேச சஞ்சாரிகளாய் ஓரோரிடத்து ஒவ்வோர் காலத்து இவரைப் பெற்றுவிட்டனராக இவர்களை எடுத்துவளர்த்தார் வேறு வேறிடத்து வேறு வேறு குடியினரென்பதுபற்றி இவர்கள் ஆங்காங்குவளர்ந்த குடிப்பெயர்களான் வழங்கப்பட்டனர்கள் என்பவாகலான் அமையுமென்பது. உலகவழக்கினன்றிச் சிறந்ததோர் நூல்வழக்கினும் இவ்வெழுவரது ஒருடற்பிறப்பு காணப்பட்டவாற்றானே உண்மையெனக் கொள்ளத்தகும். பல்வேறிடத்தில் வேறு வேறு குடியில்வளர்ந்த இவர்களது ஒருடற்பிறப்புப் பின்பு உணரப்பட்டவாறு இங்ஙனமென்பதும் இவ்வெழுவரும் தமதோருடற் பிறப்பினை உணர்ந்தனராவர் என்பதும் இப்போது தெற்றெனப்புலப்படவில்லை. எத்துணையோ நூற்றாண்டு

---

* இதனைப் 'பாகொன்று சொல்லி' என்னுந்தொண்டைமண்டல சதகச் செய்யுளானுமுணர்க.

† ப்ரும்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் ஐங்குறுநூற்று முகவுரை, பக்கம் - கஉ.

கட்கு முன்புநிகழ்ந்த இவ்வரிய செய்தியினுண்மையை இப்போதுள்ள சுருங்கிய கருவிகளைக்கொண்டு தெளிதல் அரிது. ஆயினும் எத்துணையோ நல்லிசைப்புலவரும் வள்ளல்களும் உளராகவும் அவர்கள்பாலெல்லாங் காணுமல் இவ்வெழுவர் பாலேஇக்கதை சிறப்பாகத் தொன்றுதொட்டு வழங்கப்படுதலால் இதன்கண் ஒருண்மை யுளதாவதிலையமில்லை. ஓர்குடிப்பிறந்து ஓர்குடிக்கண்வளர்ந்து அவ்வளர்ந்த குடிக்கேற்ற பெயரும் ஒழுக்கமும் பூண்டு விளங்கினுர் வடவாரிய ருள்ளும் பண்டைக்காலத்தே பலராதல்போல இத்தென்றமிழர்க்குங்கொள்ளத்தகும்.

இடங்குடிமுதலியவற்ருன் இக்கபிலர் முதலாயோர் வேற்றுமை பெரிதுடையரேனும் நுணுகிநோக்கின் இவர்கள் ஒருகாலத்தவர்களாதல் தெளிவாம். அதிகமானை ஔவையார் பாடிய பாடல்கள் அவ்விருவரும் ஒருகாலத்தவரென்பது தெரிவிக்கும். அவன் தகடூர் பொருதுவீழ்ந்தபோது அவன் பிரிவாற்ருதுபாடிய அரிசில்கிழார் பேகனுற்றுறக்கப்பட்ட கண்ணகி என்பாளை அவன்பாற்சேர்த்தல் வேண்டி அப்பேகனைப்பாடினரென்பது கசசு ஆம்புறப்பாட்டான் அறியப்படுவது. அக்கண்ணகி காரணமாகவே அப்பேகனையே கபிலர் பரணர் பெருங்குன்றூர்க்கிழார் என்னுமிவர்களும் பாடியுள்ளாராதலின் (புறம் கசங, கசச, கசடு, கசஎ) அதியமான் ஔவையார் அரிசில்கிழார் கபிலர் பரணர் பெருங்குன்றூர்க்கிழார் இவர்களெல்லாம் ஒருகாலத்தவராதல் நன்குதெளியலாகும். வள்ளுவர் திருக்குறள் அரங்கேற்றியபோது அதனைக்கபிலருங்கேட்டுச் சிறப்பித்துப்பாடியிருத்தலின் (திருவள்ளுவமாலை)இக்கபிலர் முதலிய நால்வரும் ஒருகாலத்தவரென்பது தெள்ளிது.

*பாரி பறித்த† கலனும் பழையனூர்க்
காரியன் றீந்த களைக்கோலுஞ்—சேரமான்
‡வாராயோ வென்றழைத்த வார்த்தையு மிம்மூன்று
நீலச்சிற் றுடைக்கு நேர். (தமிழ்நாவலர்சரிதை)

* இஃது ஔவையார் திருக்கோவலூரில் அங்கவை சங்கவை என்பார் மழையால் நனைந்த தமக்கு ஓர் நீலச்சிற்றுடை நல்கினபோது பாடியது: ஔவையார் பாரிபாற் பரிசில்பெறச் சென்றபோது இவரது பேரறிவுடை

என்னும் ஔவையார்பாட்டானும் ஔவையாரும்பாரியும் பெருநண்பினரென்பது தெளியப்படுதலால் அப்பாரிக்குயிர்த்துணைவராகியகபிலரும் ஔவையாரும் ஒருகாலத்தவராதல் நன்குணரலாகும். ஒருகாலத்தவரெனத் தேர்ந்த இந்நால்வருள் ஒருவன் மாவீரனும் பெருவள்

மையை வியந்து இவருடன் அளவளாவுதலேபேரின்பமாகக்கருதி இவரைப் பிரிதற்கு உடன்படாமையாற் பரிசில்நல்காது நீட்டித்தனனாக, இவர் அவனைப்பரிசிலீந்து விடுப்பவேண்ட, இவர்வேண்டுதலை மறுத்தற்கியலானாய்ச் சிறந்த கலன்பல நல்கிவிடுத்தும் இவரைப் பிரிந்துறைய லாற்றாப் பேரன்பால் இவர்தன்பாற்றிரும்பவும் எய்தற்கிதுவே தக்கதோர் சூழ்ச்சியாகுமென்று தன்னுளத்துக்கருதிப் பிறர்சிலரை இவர் செல்நெறிவிடுத்து இவருடைய அருங்கலவெறுக்கை முழுதையும் பறித்துக்கொடுவரச்செய்ய, இவர் அவனெண்ணியவாறே அவன்பான் மீண்டு நிகழ்ந்ததறிவிக்க, அவன் முகத்தானேர்ந்து இவர் மீண்டெய்தியமைபற்றி அகத்தானுவந்து நெடுங்காலம் இவருடனளவளாவிப் பெருமகிழ்வெய்தி இவர்க்கு முன்னரினுஞ் சிறப்ப அரும்பொருள் பலவும் நல்கினன் எனவும், பழையனூரிற் காரிபால் இவர் பரிசில் பெற்றுத் தாம்வேற்றூர் புகுதற்கு விடைபெறவேண்டித் தன்கொல்லைப்புறத்துக் களையெடுப்புழிநின்ற அவன்பாற் சென்றாராக, இவரதுள்ளக்குறிப்பை இவர் கூறுமலேயுணர்ந்தஅவன் இவரைப் பிரிதற்காற்றானாய் இவரை இன்னும் பலகாலந்தன்பால் வைத்துச் சிறப்பிக்க மனங்கொண்டு இவர் இப்போது செல்லாமைக்கிதுவே தக்கத்தாகுமென்று கருதி அக்களையெடுத்தவிடத்தை யளத்தற்குரிய அளவுள்ள களைக்கோலொன்றை இவர்பால் நல்கி இதனையளந்திடுக என்று கூறி அவன் வேறுதொழில்மேலிட்டுச் செல்ல, இவரும் அங்ஙனமே யளந்து அன்று விடைபெறக் கூடாமையாற் பின்னும் அவன்பாற் சிலகாலந் தங்கினாரெனவும், சேரன் அரண்மனையில் ஒருழிப் பலருடன் இவரும் உண்டற்கிருந்தபோது ஆங்கு வேற்றுவிருந்தினனொருவன் எய்தினனாகச் சேரன் அவனுக்கிடமொழிக்கநினைந்து ஆண்டுள்ள பலரும் பிறராதலின் ஒன்றுஞ்சொல்லானாய்த் தன்னன்பிற்குரிய பெருந்தமர் இவ்வௌவையாரேயாதலால் இவரை நோக்கி ஔவையே வாராயென ஆண்டுநின்று வருமாறு அழைக்க இவர் அப்பிறனுக்குத் தம்மிடத்தை நல்கிப் பின் அச்சேரனுடன் உண்டனர் எனவும் கூறுப. இம்மூன்றும் எவ்வாறு பேரன்பேயடியாய்ப் பிறந்தனவோ அவ்வாறே நீலச்சிற்றாடை கொடுத்ததும் ஆதலின் இவை தம்முளொக்குமென்றவாறு.

† 'பறியும்' எனவும், ‡ 'வாரா யெனவழைத்த வாய்மொழியும்' எனவும் பாடம்.

ளலுமாய்ச் சிறந்தான். மற்றைமூவர் அறிவுவீற்றிருந்த செறிவுடை மனத்து வான்றோய் நல்லிசைச் சான்றோரெனச் சிறந்தார். இம்மூவரது நல்லிசைப் புலமையே இச்செந்தமிழுலகாற் பண்டுமின்றும் மிகவுமுயர்த்துப் புகழப்படுவதென்பது ஒருதலை. இம்மூவரும் பல்வகைமக்கட்கும் இன்றியமையாப் பொதுவாய ஒழுக்கங்கள் சிலபல வற்றைத் தொகுத்தோதியவாற்றானே ஒருபடிப்பட்ட தன்மையின ரென்பதுணரத்தகும். கபிலர் இன்னாநாற்பதும் வள்ளுவர் திருக்குறளும் ஔவையார் மூதுரை முதலியனவும் ஓதியவாறுபற்றியுணர்க. *நச்சினார்க்கினியர் தொல்காப்பியச் செய்யுளியலுரையில் (எஉ) 'அட்டாலும் பால்சுவையிற் குன்றாது' என்னும் வெண்பாவினை எடுத்தோதி 'இது மூதுரை' என்று கூறியவாற்றானும் நீலகேசித்தெருட்டுரைகாரர் (கடவுள்வாழ்த்துரை) 'விதியால் வருவதல்லால்' என்னும் பாடலை எடுத்துமேற்கோள்காட்டுதலானும்இம்மூதுரையின்பழைமை உணரத்தக்கது. ஒருகாலத்தவரும் ஒருதன்மையரும் ஆதல்பற்றி இவரது ஒருடற்பிறப்பு ஒருவழியான் வலிபெறுவதாகும். இப்பிறப்பையம் அதிகமான்பாலே பெரிதுமுறலாகும். அதுவும் அவன்பரிசி னீட்டித்தபோது ஔவையார் அவனைச் சினந்து அதிகமான் 'தன்னறி யலன்கொல் என்னறி யலன்கொல்' என்றது ஔவையார்க்கும் அவ்வதிகற்கும் உளதாகிய இவ்வுறவினையே குறிப்பாற் றெரித்துக் கூறப்பட்டதெனக்கொள்ளுதற்கும் இயைதலின் நீங்கும் என்க. இவ்வாறு கொள்ளுதலே பண்டுதொட்டு வழங்கும் உலகவழக்கிற்கும் செய்யுள் வழக்கிற்கும் இயைபுடைத்தாகும்.

ஔவையார் பெண்ணையாற்றங்கரையிலுள்ள புல்வேளூர் என்னுமிடத்துப் பூதனென்னுங் கொடையாளி யொருவனாற் பெரிதுஞ் சிறப்பித்துப்போற்றப்பட்டு வெயிலால் வறந்த அவன் வயலுக்குக் கிணற்று நீர் தானே ஏறிப்பாயக்கட்டளையிட்டு ஆண்டுச்சிலகாலந் தங்கிப் பின்னர்த்தகடூர் புகுந்து ஆண்டிருந்த அதிகமானெடுமானஞ்சியைப்பாடி அவன் பரிசினீட்டித்தானாக அப்போது அவன் வாயில் காப்போனிடத்து அவனை முனிந்துகூறி அக்காலத்திருந்த அறிவும் புகழுமுடைய வேறு சிலர்பாற் பரிசில் பெறும் பொருட்டுச் செல்லுதற் கொருப்பட்டார். இதனை அதிகமான் தெரிந்து இவர்க்கு வேண்

* பேராசிரியர் நூற்பெயர் கூறினாரில்லை.

டுவனவெல்லாம் விரைந்தளித்து நெடுங்காலம் உயிர் வாழ்தற்குக் கார ணமாகத் தான் அரிதின் முயன்றுபெற்ற அமிழ்தத்தன்மையுடைய நெல்லிப்பழ மொன்றையும் இவர்க்குதவ இவர் அதனைப்பெற்று அவன் தன்னினும் தம்மைமீப்பட மதித்தமைக்கு உவந்து அவன் பால் அன்பு மருமையு மிகுத்து அவனையே புகழ்ந்து பாடி அவனுக் குயிர்த் துணைவராய்ச்சிறந்தனர்.* அக்காலத்துக் கச்சியை யாண்ட தொண்டைமானுழை அவ்வதிகன் இவரைத் தூதுவிட இவர் அவன் பொருட்டுத் தூதுஞ்சென்றனர். இதனிடையிற் பாரியிடஞ்சென்று அவனாலும் அன்பு பாராட்டப் பெற்றனராவர். அதிகமான் கோவ லூர்மேற் படையெடுத்துச்சென்று அதனை யெறிந்தகாலத்தும் அவ னுடனிருந்து அவ்வென்றியைப் புகழ்ந்து பாடினர். அவ்வதிகமான் கோவலூரை யெறிந்து மீண்டு தனதூர் புகுந்து தனக்குத்தவமகன் பிறந்தானைக் கண்டபோதும் இவர் ஆண்டிருந்து அவனைப்பாடினர் (புறம் கOO). அவன் தகடூர் பொருது வீழ்ந்தபோது ஆற்றுத்துயராற் பெரிதுமிரங்கிப் புலம்பினர் (ஷை உருடு) இவ்வாறு அவன் சாந்து ணையும் அவன் செய்ந்நன்றிபாராட்டி அவற்கின்னுயிர்த்துணைவ ராய்ச்சிறந்து பின்பு அவ்வதிகமான் தவமகனாகிய பொகுட்டெழினி பாலும் அந்நட்புரிமையே பூண்டு அவனையும் புகழ்ந்துபாடி அவனா லுஞ் சிறப்புப் பலபெற்று விளங்கினர். இவர் அதிகமான்பால் நெல் லிப்பழம் பெறுதற்கு முன்பே புல்வேளூர்ப் பூதனாற் சிறப்பித் தோம்பப்பட்டனரென்பதும் அவன் வயற்குக் கிணற்று நீரேறிப் பாயக்கட்டளை யிட்டனரென்பதும்.

'பூங்கமல வாவிசூழ் புல்வேளூர்ப் பூதனையு
மாங்குவரு பாற்பெண்ணை யாற்றினையு—மீங்கு
மறப்பித்தாய் வாளதிகா வன்கூற்றை நாவை
யறுப்பித்தா யாமலகந் தந்து.'

'வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டு
முரமுரவென் றேபுளித்த மோரும்—பரிவுடனே
புல்வேளூர்ப் பூதன் புகழ்புரிந் திட்டசோ
றெல்லா வுலகும் பெறும்.'

---

* இவர்க்கும் அதிகற்குமுள்ள பெருநட்புரிமைபற்றி 'தெவ்வடு கால வைவே லெழினி, யௌவை' என்றார் திவாகரநூலாரும் (பழைய ஏடு). எழினி அதிகற்கொருபெயர் (புறம். கருஅ).

என்னுந் தமிழ்நாவலர் சரிதைப்பாடல்களானும்,

சொல்லாரு மௌவை பரிவாய்த் தனக்கிட்ட சோறுலக
மெல்லாம் பெறுமென்று பாட்டோதப் பெற்றவ ளின்னருளாற்
கல்லாரற் சுற்றிக் கிணறேறிப் பாயுங் கழனிபெற்றான்
வல்லாளன் பூத மகிபா லனுந்தொண்டை மண்டலமே.

என்னுந் தொண்டைமண்டல சதகச்செய்யுளானும் தெரிவன. அதிகமானைப்பற்றி இவர் பாடிய 'வாயிலோயே வாயிலோயே' என்னும் புறப்பாட்டால் (உ0சு) இவர் அவன் பரிசி னீட்டித்தமைபொருது நெடுமானஞ்சி 'தன்னறியலன்கொல் என்னறியலன்கொல், அறிவும் புகழுமுடையோர் மாய்ந்தென, வறுந்தலை யுலகமுமன்றே யதனாற், காவினெங் கலனே சுருக்கினெங் கலப்பை......எத்திசைச் செல்லினும் அத்திசைச்சோறே' என்று சினந்து கூறி வேற்றிடங்கட்குச் செல்ல ஒருப்பட்டனர் என்பது அறியப்படுவது. பின்பு அதிகன்இவர்க்குப் பரிசில் நல்கி வரிசைசெய்ய உவந்து அவன் பரிசினீட்டித்தானென நினைந்து அவனை வெறுத்துச் செல்லற்கொருப்பட்ட தந்நெஞ்சினைக்கழறி, அதிகமான் பரிசில் பெறுங்காலம் நீட்டிப்பினும் நீட்டியாதொழியினும் அப்பரிசில் தப்பாது என்று கூறி அவனையும் வாழ்த்தினரென்பது க0க ஆம்புறப்பட்டான் விளங்குகின்றது. இவர்பால் இவன் என்றைக்கு ஒருபடியானபேரன்பே பூண்டிருந்தனனென்பது 'ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம், பலநாள் பயின்று பலருடன் செல்லினுந், தலைநாட் போன்ற விருப்பினன்' (ஷை கஙக) என இவர் அவனைக்கூறியதனானே அறியலாகும். அமுதத் தன்மைபொருந்திய நெல்லிப்பழ மொன்றை அதிகமான் ஒளவையார்க் களித்தனனென்பது "சிறியிலை நெல்லித் தீங்கனிகுறியா, தாதனின்னகத்தடக்கிச் சாதனீங்க வெமக் கீத்தனையே' (புறம் கூக) 'வன்கூற்றை நாவை யறுப்பித்தாயாமலகந்தந்து' என இவர் பாடியவாற்றானும், 'கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி யமிழ்துவிளை தீங்கனி யௌவைக் கீந்த...அதிகனும்' எனச்சிறுபாணாற்றுப்படையில் நத்தத்தனார் கூறியதனானும் அறியப்படுவது. பரிமேலழகரும் இதனையே சுட்டி 'ஒளவையுண்ட நெல்லிக்கனிபோல்வது' என்றார் (திருக்குறள் க00). அதியமான் பொருட்டுத் தொண்டைமா

னுழைத் தூதுசென்றபோது அத்தொண்டைமான் தன்போர்வலி யின் பெருமையுணருமாறு தன் படைக்கலக் கொட்டிலைக்காட்ட இவர் அவற்றைப்பார்த்து 'இப்படைக் கருவிகளெல்லாம் போரிற் பயன்படாமையாற் பீலியணிந்து மாலைசூட்டிக் காம்பு திருத்தி நெய்யணிந்து காவலையுடைய அரண்மனைக்கண்விணே தங்குவன; எம்முடைய அதிகன்வேல் பகைவரைக் குத்துதலான் நுனிமுரிந்து கொல்லன் பணிக்களரியிற் சிறிய கொட்டிலிடத்துற்றன' என்று அத்தொண்டைமான் வீரத்தை யிகழ்ந்து தமது அதிகன்போர் வீரத்தையே மேம்படுத்துரைத்தார். இத்தூது சென்றமையானும் இவ்வமையத்து எடுத்துமொழிந்த வீரவார்த்தையானும் இவரது ஆண்மையும் அறிவும் செய்ந்நன்றிமறவாமையும் நன்றறியத்தக்கன. மேற்குறித்த 'இழையணிப்பொலிந்த' என்னும் பாட்டும் அத்தொண்டையர்வேந்தன் நும் நாட்டிற் போர்புரிவாரும் உளரோ என இவ்வௌவையாரை வினவியபோது அவனுக்கு விடையாக உரைத்ததாகும். இவர் அதிகனையே தம்மரசனாகக்கொண்டு என்னை எனக் கூறுதலுங்காண்க, (புறம் கூகூ). அதிகமான் கோவலூரெறிந்த தனை இவர் பாடினரொன்பது "இன்றும், பரணன் பாடினன் மற்கொன் மற்றுநீ, முரண்மிகு கோவலூர் நூறிநின், னரணடு திகிரியேந்திய தோளே". (புறம் கூகூ) என்பதனாலறிக. இவ்வடிகளானும் அதிகன் பரணர் ஔவையார் இவர்கள் ஒருகாலத்தவராதல் புலனும். அகநானூற்றில் "நெடுநெறிக் குதிரைக் கூர்வே லஞ்சி, கடுமுனையலைத்த கொடுவிலாடவ, ராகொள் பூசலிற் பாடுசிறந் தெறியும் பெருந்துடி." (௬எ௨) என்பதனானும் "வாய்மொழி, நல்லிசை தருஉமிரவலர்க்குள்ளிய, நசைபிழைப்பறியாக் கழறொடி யதியன்' (கரு௨) என்பதனானும் அதிகமான் வீரமுங்கொடையும்பற்றிப் பரணராற் புகழ்ந்து பாடப்பட்டுள்ளான் என்பதும் அறிக. இவ்வௌவையார் அதிகனைப்பாடிய பாடல்கள் பெரும்பாலும் அவனுடைய வீரமுந் தியாகமும் பற்றியேவருவன. அவன் இரவலர்க்கெளியனுய்ப் புரவலர்க்கரியனுய் நின்ற நிலைமை இவராற்பெரிதும்பாராட்டப்படுவது; இதனை,

> ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
> னீர்த்துறை படியும் பெருங்களிறு போல

வினியை பெரும வெமக்கே மற்றதன்
றுன்னருங் கடாஅம் போல
வின்னுய் பெருமநின் னொன்ன தோர்க்கே.

எனவரும் இனிய பாடலானறிக. இவர் அதிகமான் இறந்ததன் மேலும் அவன் மகன் போகுட்டெழினிபாற் சில காலந்தங்கிப் பின்னர்த் தமிழ் மூவேந்தர்பாற் செல்லற்கெழுந்து பழையனூர் புகுந்து ஆண்டுள்ள காரி என்பவனால் உபகாரம்பெற்று அவன் தம்பால் வைத்த அன்பின் மிகுதியாற் பிரிதற்கியலாது அவன் வேண்டியன சில செய்தொழுகிச் சில்போது கழித்தனர். இவனது பேரன்புடைமையே இவராற் 'காரியன்றீந்த களைக்கோலும்' என்பதனாற் புகழ்ந்து பாராட்டப்பட்டது. களைக்கோலென்பது களையெடுக்குங் கோல் என்று கொண்டு இவர் அவன் வேண்ட அவனுடைய கொல்லைக்குக் களையெடுத்தனர் எனவுங் கூறுப. இக்கதை

ஏரி னியற்றுங் களைக்கோலை யீந்தன்ன மிட்டுநெல்ல
பாரி பறித்தென்னும் பாடல்கொண் டோன்பண்பு சேர்பழைய
னூரி விருப்பவ னௌவைதன் பாடற் குவந்தபிரான்
மாரி யெனத்தரு கைக்காரி யுந்தொண்டை மண்டலமே.

என்னும் தொண்டை மண்டல சதகச் செய்யுளானும் அறியப்படும். பின் அக்காரிக்கு ஆடு வாங்கிக்கொடுக்கவேண்டி வாதவன் வத்தவன் யாதவன் என்னும் மூவரிடத்துப்போய்க் கேட்க அவர்கள் கொடாமையாற் சேரநாட்டுச்சென்று வஞ்சிநகர்புக்கு ஆண்டுள்ள சேரன்பால்,

வாதவர்கோன் பின்னையென்றான் வத்தவர்கோ னாளையென்றான்
யாதவர்கோன் யாதொன்று மில்லையென்றா—னாதலால்
வாதவர்கோன் பின்னையினும் வத்தவர்கோ னாளையினும்
யாதவர்கோ னில்லை யினிது. (தமிழ்நாவலர் சரிதை)

என்னும் பாடலைப் பாடித் தஞ்செய்தி கூற அச்சேரன்மகிழ்ந்து பொன்னேடு கொடுக்கப்பெற்று அப்போது,

சிரப்பார் மணிமுடிச் சேரமான் றன்னைச்
சுரப்பாடு கேட்கவே பொன்னேடொன் றீந்தா
னிரப்பவ ரொன்பெறினுங் கொள்வர் கொடுப்பவர்
தாமறிவர் தங்கொடை யின்சீர். (ஷ)

என்னும் பாடலைப்பாடிக் காரிபொருட்டெய்திய பொன்னாட்டை அவன்பாற் சேரவிடுத்து அச்சேரனா லினிதோம்பப்பட்டுச் சிலகாலம் அவன்பாற் றங்கினர். இவர் சேரன் மாளிகையில் இனிதுண்டு வாழ்ந்திருந்தனர் என்பது இவர் அவனைப்பிரிந்தபோது கூறிய,

சிறுக்கீரை வெவ்வடகுஞ் சேதாவி னெய்யு
மறுப்படாத் தண்டயிரு மாந்தி—வெறுத்தேனை
வஞ்சிக்குங் கொற்கைக்கு மன்னவனேற் பித்தானே
கஞ்சிக்கும் புற்கைக்குங் கை. (ஷை)

என்னும் பாடலானறியப்படுவது. பின்பு இவர் சேரனுடைய வஞ்சியினின்று நாஞ்சின்மலைச்சென்று ஆண்டிருந்த வள்ளுவன் என்பானை அரிசி கேட்க அவன் இவர்க்கு யானை கொடுத்தானாக அப்போது அவனது கொடைமடத்தை வியந்து 'தடவுநிலைப் பலவினாஞ்சிற் பொருநன்' (கூ௪0) என்னும் புறப்பாட்டைப் பாடி ஏழிற்குன்றம் போய் ஆண்டுள்ள அரசன் ஒருவனைப்பாட அவன் இவரது அருமையும் பெருமையும் அறியாமையால் அவனை,

இருடீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே
குருடேயு மன்றுநின் குற்ற—மருடீர்ந்த
பாட்டு முறையும் பயிலா தனவிரண்
டோட்டைச் செவியு *முள.

என்னும் பாடலால் முனிந்து பழித்துரைத்தனர். இஃது ஏழிற்கோவை ஔவை முனிந்து பாடியது எனப் பேராசிரியரும் (தொல் செய் கஉ௫) இஃது ஏழிற்கோவை ஔவையார் பாடியது என நச்சினார்க்கினியரும் (ஷை) ஏழிற்கோவைப்பாடிய அங்கதம் எனத் தமிழ்நாவலர் சரிதையுடையாரும் கூறினர். ஏழில் என்பது ஓர் மலை. நன்னன் என்னுங் குறுநில மன்னனுடையது. நன்னனுடைய மலையரணாகிய பாழி யென்பதும் இதனோர் பகுதியதாகும். இதனை 'நன்ன, னேழி னெடுவரைப் பாழிச் சிலம்பின்' (அகம் க௫உ) 'நன்ன னன்னாட்டேழிற் குன்றத்துக் கவாஅன்' (ஷை ௩௪கூ) என வருவனவற்றானுணர்க. இந்நன்னன் மரபிற்றோன்றிய இளவிச்சிக்கோ என்பானொருவன் இளங்கண்டீரக்கோ என்பவனோ டொருங்கிருந்த

* முளை எனவும் பாடம்.

வழிச்சென்ற பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர் இளங்கண்டீரக்கோவைப் புல்லி இளவிச்சிக்கோவைப்புல்லாராக அப்போது அவ்விளவிச்சிக்கோ புலவரைநோக்கி நீர் என்னை என்செய்யப் புல்லீராயினீர் என்று வினவ அதற்கவர் அவன் மரபிற் பெண்டிரும் பாடுவார்க்குப் பிடிகளைப் பரிசிலாகக்கொடுக்கும் வண்புகழுடையனாதலின் அவனைப் புல்லினேன். (நுமருளொருவன்) பாடுவார்க்கடைத்த கதவுகாரணமாக நும்முடைய மலையை எம்மனோர் பாடுதலொழிந்தனராதலால் யான் நின்னைப் புல்லேனாயினேன் என வுரைத்தார் என்பது கருக-ஆம்புறப்பட்டான் அறியப்பெறுதலால் அப்பாடுவார்க்குக் கதவடைத்தவன் நன்னனுக்கும் பெருந்தலைச்சாத்தனாரால் புல்லப்பெறாத இளவிச்சிக்கோவுக்கும் இடையிற்றோன்றியோனொருவனெனத் தேறலாகும். இவ்வௌவையாரால் முனிந்து பாடப்பட்டவன் அக்கதவடைத்தவனாவன். பெருந்தலைச்சாத்தனார் வள்ளல்கள் எழுவருமாய்ந்த பின்னிருந்த புலவர் என்பது அவர் குமணனைப்பாடியுள்ளவைபற்றி அறியலாகும். இவ்வாறு ஏழிற்கோவை முனிந்து பாடி வழிச்செல்வோர் ஓரூரில் ஒருநாட் பசியினாலே ஒருவன்மனையிற்போக அவன் சோறில்லைபோ என்று சொன்னபோது அவன் மனைவி உபசாரஞ்சொல்லி அன்னமிட்டாள் அப்போது,

அற்ற தலையி னருகிற் றலையதனைப்
பற்றித் திருகிப் பறியேனோ—வற்றன்
மரமனையா னுக்கிம் மனையாளை யீந்த
பிரமனையான் காணப் பெறின். (தமிழ்நாவலர் சரிதை.)

என்னும்பாடலைப் பாடிப் பின்னுஞ் செல்வார் ஓரூரிலொரு குறவன் பலாமரத்தைப் பகைவர்வெட்டிப்போகட அவன் வருந்துவதற்கிரங்கி அப்பலா வளரும்படி,

கூரிய வாளாற் குறைபட்ட கூன்பலா
வோரிலையாய்க் கொம்பா யுயர்மரமாய்ச்—சீரிய
வண்டுபோற் கொட்டை வளர்காயாய்ப் பின்பழமாய்ப்
பண்டுபோ னிற்கப் பணி. (ஷை)

எனத்தெய்வத்தை வேண்டிப்பாடி வளர்ப்பிக்க அதற்குக்குறப்பிள்ளைகள் மகிழ்ந்து நாழித்தினை கொடுக்க அதனையன்பாலேற்றுச்சோ

ணூட்டு உறையூர் புகுந்து சோழன்பாற் சென்று பாட அவன் இவர்க்குப் பரிசில் பலவளித்து வரிசைபலசெய்ய அதற்குவந்து

கூழைப் பலாத்தழைக்கப் பாடிக் குறச்சிறூர்
*மூழக் குழக்குத் தினைதந்தார்—சோழாகே
ளுப்புக்கும் பாடிப் புளிக்கு மொருகவிதை
யொப்பித்து நிற்கு முளம். (ஷ)

என ஓர் செய்யுளுரைத்துத் தினைத்துணை நன்றியையும் பனைத்துணையாக் கருதுகின்ற தம்மியல்பினை யவனுக்கறிவுறுத்தி அவன்பாற்றங்கினர். ஒரு நாள் இவர் அச்சோழன்பாலொன்று பாடும்போது அவன் ஒரு துகிலைப்பார்த்துப் பராக்காக இருப்ப அப்போது இவர்

நூற்றுப்பத் தாயிரம் பொன்பெறினு நூற்சீலை
நாற்றிங்க டன்னிற் கிழிந்துபோ—மாற்றலரைப்
பொன்றப் புறங்கண்ட போர்வே லகளங்கா
வென்றுங் கிழியாதென் பாட்டு. (ஷ)

என்னும் பாடலைப்பாடினர். அக்காலத்துச்சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியென்பவன். அவனிராசசூயம் வேட்டபோதும் ஆங்கிருந்து அவ்வேள்வியின் பொருட்டு ஆண்டெய்திய சேரன் மாவெண்கோவையும் பாண்டியன் உக்கிரப்பெருவழுதியையும் அச்சோழனையும் ஒருங்கு வாழ்த்திப்பாடினர் (புறம் ௩௬எ) இவர் அச்சோணாட்டில் வெண்ணி, அம்பர், குடந்தை முதலிய பலவூர்கட்குஞ் சென்றுளா ரென்பது இவர் பாடல்களா னறியப்படுவது. இவர் " கைவண் கிள்ளி வெண்ணி சூழ்ந்த" (நற்றிணை ௩௯0) எனவும் " நல்லம்பர் நல்லகுடி யுடைத்து" (திருமுருகாற்றுப்படை யுரை மேற்கோள்) எனவும் பாடுதலான் அறிந்து கொள்க. இவர் திருக்குடந்தையிற் சென்று அங்கு ஒருவன் உலோபியும் ஒருவன் விதரணியுமாக இருந்தாரைக் கண்டு,

திருத்தங்கி தன்வாழை தேம்பழுத்து நிற்கு
மருத்தன் றிருக்குடந்தை வாழை— குருத்து
மிலையுமிலை பூவுமிலை காயுமிலை யென்று
முலகில் வருவிருந்தோ டுண்டு. (ஷ)

---

* மூன்றுழக்கு உழக்கு என்பதன் விகாரம். உழக்கு - காற்படி, நாழி-ஒருபடி.

என்னும் பாடலைப்பாடினரென்பவாகலான் இவர் திருக்குடந்தைக்குச் சென்றமை யுணரப்படும். திவாகரம் விலங்கின் பெயர்த்தொகுதியிறுதிக் கட்டுரையில் "ஔவை பாடிய வம்பர் கிழவோன்" எனவருதலானும் இவரே அம்பரைச் சிறப்பித்துக் கூறுதலானும் அக்காலத்து அம்பர் நகரத்திருந்த அம்பர்கிழான் அருவந்தை என்பானையும் பாடி அவனாலும் போற்றப்பட்டனராவர். பின் சோணாடு விட்டுப் பாண்டியனாடு செல்வாராய் அக்காலத்துச் சித்தன்வாழ்வெனவும் பெயர் சிறந்த திருவாவினன்குடிப்போந்து சின்னாட்டங்கியப்பாற் பாண்டியர் பதிக்கட்புக்கு ஆண்டரசு புரிந்த உக்கிரப் பெருவழுதியையும் அவனாலினிதோம்பப்பட்ட பழுதில் கேள்வி முழுதுணர் பேரவை நல்லிசைப்புலவர் பல்லோரையும் கண்டு மகிழ்ந்து,

நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன்வாழ்
வில்லந் தொறுமூன் றெரியுடைத்து— நல்லரவப்
பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியநின்
னாட்டுடைத்து நல்ல தமிழ். (திருமுருகாற்றுப்படையுரை)

என்னும் பாடலைப்பாடினர். இதனான் இவர் பாண்டி நாடு புகுதற்கு முன்னே வேற்றுநாட்டு ஊர்கள் பலவற்றிற்குச் சென்றிருந்தனர் எனவும் ஆண்டெல்லாமில்லாத நல்ல தமிழைப் பாண்டிநாட்டேதான் கண்டன ரெனவும் அக்காலத்து அம்பர் நகரத்து வளமையும் வண்மையு மிக்க குடிகள்பலஇருந்தன எனவும் திருவாவினன் குடியில் முத்தீயோம்பும் நான்மறை யந்தணர் நிறைந்திருந்தனர் எனவும் அறியப்படும். நல்லிசைப் புலவர் பல்லோர் ஒருங்கு குழீஇத்தமிழாயுநன்னா டாதலின் நின்னாட்டுடைத்து நல்லதமிழ் என்றார்: இவர் அப் பாண்டியன்பால் இனிதுறையுங்காலத்து ஓர்நாள் அப்பாண்டியன் தன் வாயிலில் ஐந்து பொற்கிழி கட்டி வைத்து மூன்றுகிழி சங்கிலியிறப்பாடுக எனவும் ஒருகிழிக்கு நிறை நில்லாத கவிபாடுக எனவும் மற்றொன்றுக்கு நாலு கோடிகவி பாடுக எனவும் சொன்னபோது இவர்,

தண்டாம லீவது தாளாண்மை தண்டி
யடுத்தக்கா லீவது வண்மை யடுத்தடுத்துப்
பின்சென்றா லீவது காற்கூலி பின்சென்றும்
பொய்த்தா னிவனென்று போமே லவன்குடி
யெச்ச மிறுமே லிறு. (தமிழ்நாவலர்சரிதை)

வழக்குடையார் நிற்ப வரும்பொருள்கை வாங்கி
வழக்கை வழக்கழிவு சொல்லின்— வழக்குடையார்
சுற்றமுந் தாமுந் துடைத்தெழுகண் ணீராலேழ்
சுற்ற மிறுமே விறு. (ஷ)

சென்றுழு துண்பதற்குச் செய்வ தரிதென்று
மன்றுழு துண்பான் மனைவாழ்க்கை— முன்றிலிற்
றுச்சிலிருந்து துடைத்தெழுகண் ணீராலே
ழெச்ச மிறுமே விறு. (ஷ)

என்னும் பாடல்களைப்பாடி முதன்மூன்று கிழிகளையும் இற்று வீழச் செய்து,

வையக மெல்லாம் வயலாய் வானோர்
தெய்வமா முகடு சேரி யாகக்
காணமு முத்து மணியுங் கலந்தொரு
கோடானு கோடி கொடுப்பினு மொருநா
ளொருபொழு தொருவனூ ணுழிதல் பார்க்கு
நேர்நிறை நில்லா தென்னுமென் மனனே
நேர்நிறை நில்லா தென்னு மனனே. (ஷ)

எனஓர் நிறை நில்லாத அகவலும்,

மதியாதார் முற்ற மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி யுறும்.
உண்ணீருண் ணீரென்றே யூட்டாதார் தம்மனையி
லுண்ணாமை கோடி யுறும்.
கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுவதே கோடி யுறும்.
கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடைநாக்
கோடாமை கோடி யுறும். (ஷ)

என நாலு கோடி கவியும் பாடித் தஞ்சொல்லின் மாட்சி யெல்லார்க்குந் தெரித்து வேத்தவையேத்த விளங்கி வதிந்தனர்.

(இன்னும் வரும்.)

ரா. இராகவையங்கார்,
பத்திராசிரியர்.

திருவாதவூரர் புராணம்.

சமயகுரவருள் ஒருவராகிய மாணிக்கவாசகசுவாமிகள் எனப்படுந் திருவாதவூரருடைய திப்பிய சரித்திரத்தினைக் கூறும் இப்புராணம் இங்குள்ள சிவாலய விநாயகாலய குகாலயங்களிலும், மற்றையாலயங்களிலும், மடாலயங்களிலும் வருடந்தோறும் பத்தியோடுங் கிரமமாகப் பலருங் கேட்குமாறு படித்துப் பொருளுஞ் சொல்லப்பட்டு வருகின்றது. வித்தியாசாலையிலே படிப்பிக்கும் பாடங்களுள்ளும் ஒன்றாக வைத்துப் படிப்பிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு பிரசித்தியாதல்பற்றிச் சிலர் மூலபாடமும், சிலர் மூலபாடத்தோடு உரையுமாகப் பலர் இதனை அச்சிட்டிருக்கின்றார்கள். அச்சிடப்பட்ட பிரதிகளையும் இப்போது அகப்பட்ட சில ஏட்டுப்பிரதிகளையுஞ் சேர்த்துப்பார்த்தோம். பேதங்கள் பலவாகக் காணப்படுகின்றன. ஏட்டுப்பிரதிகளிலே அச்சுப்பிரதிகளினின்றும் வேறாகக் காணப்படும் பாடங்களுள்ளே பல சிறப்புடையனவாகக் காணப்படுகின்றன. அவற்றுள்ளே சில கற்போர்க்கு உபகாரமாக இங்கே காட்டப்படுகின்றன.

பாயிரத்திலே ௩-ஞ் செய்யுளிலே முதலடியினிறுதியைத் 'தும்பிமுகனெம்பிசீர்' என்று சிலரச்சிட்டனர். வேறு சிலர், 'தும்பிமுகர்தம்பிசீர்' என்று அச்சிட்டனர். 'தும்பிமுகனெம்பிசீர்' என்பதுவே ஏட்டுப்பிரதிகளிலுங் காணப்படுகின்றது. எம்பி என்பதுவுந் தம்பி என்னும் பொருளையே யுணர்த்தும். 'எம்பியு மனுசனுமிளையோன் பெயரே' என்பது பிங்கலநிகண்டு.

மந்திரிச்சருக்கம். க.

முக்கணொரு நான்குபுய மைந்துமுக முன்னோன்
சொக்கனரு ணன்மைபெறு தொன்மைதிகழ் நன்னா
டக்கடு விடத்தையயா னுக்கருள்வ தென்றே
மைக்கடலில் வைகலொழி வைகைவள நாடு.

இதன் முதலாமடி 'முக்கணனொர் நான்குபுயனைந்துமுகன் முன்னோன்' என்று சில ஏட்டுப்பிரதிகளிற் காணப்படுகின்றது.

'முக்கணொரு நான்குபுய மைந்துமுகமுன்னோன்' எனப் பன்மொழித்தொகையாகக் கொள்ளும் பாடத்தினும் 'முக்கணன்' என்பது முதலியவாகத் தனித்தனி முடியும் முடிவுடைய பாடமே சிறப்புடையது.

மந்திரிச்சருக்கம். கக.

இதுநூன்மற் றல்லதுநூ லில்லையெனு மறுசமய
விதநூலுந் தலநூலும் விரிந்தபுரா தனநூலும்
பொதுநூலென் றுலகனைத்தும் புகழ்மறைநூ லுஞ்சைவ
முதனூலுந் தரிப்பார்க்கு முந்நூலுந் தரித்தார்கள்.

இதன்கணுள்ள 'தலநூலும்' என்பது சில ஏட்டுப்பிரதிகளிலே 'தவர்நூலும்' என்று காணப்படுகின்றது; சில ஏட்டுப்பிரதிகளிலே 'தவநூலும்' என்று காணப்படுகின்றது. இவற்றுள்ளே கொள்ளத்தக்கது யாது? திருவாதவூரர் ஸ்தலபுராணங்களையும் கற்றுணர்ந்தார் எனக்கொள்வது பொருந்துமா? ஸ்தலபுராணங்களுக்கு வரையறையுமுண்டா? முதனூலாகிய ஆலாசியமான்மியம் எங்ஙனங் கூறும்! வேதவேதாங்கங்களையும், ஆகமங்களையும், புராணங்களையும், ஸ்மிருதிகளையும் பிறவற்றையும் கற்றுணர்ந்தார் என்று கூறும்! ஸ்தலபுராணங்களையுங் கற்றார் என்பது ஆலாசியமான்மியத்திலே கூறப்படவில்லை. 'தவர்நூல்' என்பதன் பொருள் யாது? இருடிகளாற் செய்யப்பட்டது என்னும் பொருளுடைய ஆரிடம் என்பது போல இருடிகள் செய்தநூல்களாகிய ஸ்மிருதிகள் என்றும் அதற்குப் பொருள் கூறப்படும். 'தவர்நூல்' என்பது நன்னூல் விதியாகிய 'சிலவிகாரமாமுயர்திணை' என்றபடி 'தவநூல்' எனவும் வரும். ஆதலின் முதனூலிலே ஸ்மிருதிகளையுங் கற்றார் என்பதற்கியையத் 'தவர்நூல்' என்றாவது 'தவநூல்' என்றாவது கொள்வது தக்கது போலும்!

மந்திரிச்சருக்கம். உகூ.

விற்படை வெற்றி மடந்தையு மிக்க மலர்த்திரு வும்பயின்
மற்புய வெற்பின னங்கயல் வைத்த வலத்தன் வழங்கிய
பொற்பு மிகுத்த தனங்கொடு பொற்கவ னப்பரி கொண்டிட
நற்பய ணத்தை முயன்றனர் நக்கனை நெக்குணர் கின்றவர்.

இதன்கணுள்ள 'அங்கயல் வைத்த வலத்தன்' என்பதிலிருக்கும் பொருட்சிறப்பு யாது? சில ஏட்டுப்பிரதியிலே 'மற்புயன்' என்றும், 'வெற்பினிலங்கயல் வைத்த வலத்தன்' என்றும் பாடபேதம் காணப்படுகின்றன. அதுவே பொருட்சிறப்புமாகும். அதுவே நூலாசிரியர் கருத்துமாகும் என்பதனைக் குதிரையிட்ட சருக்கத்திலே ௩௩-ஞ் செய்யுளிலே வரும் 'பொற்றடங்கிரியின்மீது பொருகயல் பொறித்துமீண்ட வெற்றிகொண் மன்னர்மன்னன்' என்பதும் புலப்படுத்தும்.

திருப்பெருந்துறைச் சருக்கம். ௩0.

திருத்திகழும் வேதியனு ரம்பொன் மேனி
  திகழ்வதுகண் டகமகிழ்வார் செங்கை மீது
பொருத்தமுறும் புத்தகமே தையா வென்னப்
  பொய்ம்மையிலாச் சிவஞான போத மென்றார்.

இதன்கணுள்ள 'பொய்ம்மையிலா' என்பது ஏட்டுப்பிரதிகளிலே 'பொய்ம்மையிலார்' என்று காணப்படுகின்றது. 'பொய்ம்மையிலா' என்பதினும் 'பொய்ம்மையிலார்' என்பது பெரிதும் பொருட் பெலமுடையதாகக் காணப்படுகின்றது. 'பொய்ம்மையிலா' என்னும் அடைமொழியால் ஆண்டுறும் பொருட்பெலம் யாது?

திருப்பெருந்துறைச் சருக்கம். ௫௨.

மாலயன் வலாரி மற்றை வானவர் பிழைக்க முன்னாள்
ஆலமுண் டவனே நல்ல வமுதமுண் டருளா யென்று
சீலமா மகிழ்ச்சி பொங்குஞ் சிந்தையி னுரைப்பக் கால
காலனு முண்டு நீராற் கரமலர் கழீஇய பின்னர்.

சிவபிரானும் உண்டு கரமலர் கழுவினர் என்பது மரபாகுமா? சில ஏட்டுப் பிரதிகளிலே "சிந்தையினுரைத்துக் கால காலன்றன் கரங்கணீராற் கவின்பெறக் கழீஇயபின்னர்" என்னும் பாடங்காணப்படுகின்றது. இதுவே மற்றைப்புராணங்களிற் கூறும் மரபிற்கு இயைபுடையது. கந்தபுராணத்திலே உமாதேவியாருடைய திருமணத்திலே நிவேதிக்கப்பட்ட திருவமுதுகளைத் திருக்கரத்தினாலே பரிசித்துக் கிருபைசெய்தார் என்றும், திருவிளையாடற் புராணத்தி

லே தடாதகைப்பிராட்டியாருடைய திருமணத்திலே நிவேதிக்கப்பட்ட திருவமுதுகளையுந் திருக்கரத்தினாலே தீண்டி உண்டதுபோல மகிழ்ந்தார் என்றுங் கூறுவர். "கறைமிடற்றணிந்தமேலோன் கரத்தினாலவற்றைத் தொட்டாங்-குறுபெருங்கருணைசெய்து" என்பது கந்தபுராணம். "அங்கைவைத்தமுதுசெய்தாங் ககமகிழ்ந்து" என்பது திருவிளையாடற்புராணம்.

திருப்பெருந்துறைச் சருக்கம். அஉ.

அன்புட னோக்கி நிற்ப ரழுவர்கை தொழுவர் வீழ்வர்
இன்புற வெழுவர் பின்பா லேகுவ ரிரங்கி மீள்வர்
நன்பகற் கங்குல்காணார் ஞானநல் லறிவே கொண்டு
கொன்புனை பித்தர் பாலர் பிசாசர்தங் கொள்கை யானார்.

இங்கே "ஞானநல்லறிவே" என்பதன் பொருள் யாது? ஞானம் என்பதும் அறிவு என்பதும் ஒரு பொருள் குறித்த கிளவிகளன்றோ! "ஞானநல்லறிவே" என்பது சில ஏட்டுப்பிரதிகளிலே "ஞானநல்வடிவே" என்று காணப்படுகின்றது. நோக்குதல், அழுதல் முதலியனவாக அவர்பானிகழ்ந்த செயற்கெல்லாம் காரணமாய் நின்றது ஞானவடிவமேயாம்.

குதிரையிட்ட சருக்கம். கூ௫.

பரித்திர ணரியே யான பான்மைகண் டடியேன் றன்னை
வருத்தின ரிதனை மாற்ற வல்லநீ மாற்றா யாகிற்
றரித்தனை விடத்தை யென்னுந் தன்மையும் புரங்கண் முன்னா
ளெரித்தது மென்கொ லோவென் றிரங்கின ரெவர்க்கு மிக்கார்.

இதன்கணுள்ள "எரித்ததுமென்கொலோ" என்பது சில ஏட்டுப்பிரதிகளிலே "எரித்ததுமிலவா மென்றென் றிரங்கினர்" என்று காணப்படுகின்றது. "என்கொலோ" என்பதினும் இலதாம் என்பதே பொருள்வலியுடையது.

மண்சுமந்த சருக்கம். கூ௱.

பாம்பணி செய்ய வேணிப் பரம்பர னடியார் கைமேல்
ஆம்பொரு ணமதே யானா லறம்பிறர்க் காவ துண்டோ
தேம்படு மலங்கன் மார்பீர் செயலிதற் குமது மேனி
சாம்புவ தவமே யான்செய் தண்டமே தகவி லாமை.

இதன்கணுள்ள "சாம்புவதவமே" என்பது "சாம்புதறவமே" என்று சில ஏட்டுப்பிரதிகளில் காணப்படுகின்றது. கடவுளைத் தியானித்து வருந்தினதுபற்றி அவர்மேனி வருந்தியது தவமாயிற்றுப் போலும். "யான்செய் தண்டமே" என்றதும் அதனைப் புலப்படுத்துகின்றது.

௩௧-ஞ் செய்யுளிலே "புடையின்மே லுலகோரின்றி" என்பது சில ஏட்டுப்பிரதிகளிலே "புடையின்மேலுடையாளின்றி" என்று காணப்படுகின்றது. "மேலுலகோரின்றி" என்பதினும் "உடையாளின்றி" என்பதுவே சிறப்புடைத்து.

புத்தரை வாதில்வென்ற சருக்கம். எ.

முந்தும் பிடக மூன்றுணர்ந்து செயிர்நான் கொழிந்து முதுசீலம்
ஐந்தும் புனைந்து பார்மீதே யாறைந் தடக்கு மியல்புடையோன்
கந்தங் கெடுதன் முத்தியெனக் காட்டுங் குரவ னிருப்பவுடன்
சந்தஞ் சிறந்த புயகிருப னிருந்தான் றுனை புடைசூழ.

இதன்கணுள்ள "பார்மீதே" என்பதனைச் சிலர் "பார்மிதை" எனக்கொண்டார். "பாரமிதை" எனக்கொள்ளுதலே பொருத்தமாகும். பாரமிதை என்றது உயிர்நேர்ச்சி முதலிய மூன்றோடுஞ் சேர்ந்து முப்பதெனப்பட்ட தானம், சீலம், பொறை, வீரியம், தியானம், உணர்ச்சி, உபாயம், தயை, பெலம், ஞானம் என்னும் பத்தினையும் போலும்.

இவ்வாறே ஆராயும்போது அச்சிடப்பட்ட பிரதிகளும் ஏட்டுப்பிரதிகளும் பலவிடங்களிலே வேறுபடுகின்றன.

யாழ்ப்பாணத்துச் சுன்னுகம்
குரோதி-ஷ சித்திரை-மீ

இங்ஙனம்,
அ. குமாரசுவாமிப் பிள்ளை.

சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் இருபெருங் காப்பியங்களின் பிறப்பிடம் யாது?

கஅறு-ம் பக்கத்தொடர்ச்சி.

8. பண்டைக்காலத்திற் பாண்டியநாட்டிற்குஞ் சேரநாட்டிற்கும் மலைவழிப் போக்குவரவிருந்தது. திருவாங்கூர் சமஸ்தானத்திற் பாண்டியமன்னர் வழிவந்தவிரண்டு அரசகுடும்பங்களுண்டு. அவைகளைப் பூஞையாறென்றும், பந்தனமென்றுங்கூறுவர். அவர்கட்கிப்போழ்து, அரசுபுரியுந்தொழிலில்லெனினும், அத்தொழில் நடாத்திவந்தவர்களின் பின்வழிக்காரர்க்குள்ள மகிமையுண்டு. அவர்களிலொருகுடும்பக்காரருடைய குலதெய்வம் 'மதுரைமீனாக்ஷிஅம்மன்' அவரெழுதுமெல்லாச் சாதனங்களின் தலையிலும் 'மதுரை மீனாக்ஷி அம்மன் துணை' என்றெழுதுவதுவழக்கம். இவ்விரு குடும்பத்தவரும் மலைவாயிலாக மதுரையினின்று, திருவாங்கூருக்குப்போந்தார். அதன்பின்னர் அவ்விடத்தரசர் அவர்கட்கடைக்கலங் கொடுத்தார்.

இதனாற் கண்ணகிசென்றவழி மற்றுமுள்ளோர் சஞ்சரித்துவந்த வழியென்பதற்குச் சந்தேகமில்லை. அவள் கருவூரை நோக்கிச் சென்றிருந்தால் வடதிசை போதல் வேண்டும். மேலுமந்நகரையேகுதற்கு வைகைக்கரைவழி குடபால் நோக்கிப்போதற்கவசியமில்லை. கோவலனுங்கண்ணகியும் வறுமையெய்தியகாலத்திற் றாங்கள் பிறந்து வளர்ந்தநாட்டின்கண் வாணிபஞ் செய்தலிழிவென்றுகருதிப் பிறநாட்டையடைந்தார்கள். அத்தன்மையதாய மனத்தேற்றமுள்ள பெண், தன்னுடைய நாட்டினூடாகக் கருவூருக்குப்போயிருக்கமாட்டாள். அந்நகர்க்கேகுதற்குச் சோழநாடுவழியில்லாமல் வேறுவழியுள்ளதாகவுங் காணப்படவில்லை.

9. இது நிற்க, மணிமேகலை 28-வது கச்சிமாநகர்புக்க காதையாற் கோவலன் தாதையாகிய மாசாத்துவான் வஞ்சியிலிருந்ததோர் புத்தராலயங்கண்டு தொழும்பொருட்டேகியங்ஙனம், முனிவர் குழாத்தின்கண் நோற்றிருக்குங்கால், மணிமேகலையான்வளெய்தி மூதாதாவினடி பணிந்து அமுதசுரபியின் மகிமையை யுரைத்தபோழ்து,

"பொன்னெயிற் காஞ்சி நாடகெவி னழிந்து
மன்னுயிர் மடிய மழைவளங் கரத்தலி
னந்நகர் மாதவர்க் கைய மிடுவோ
ரின்மையி னிங்க ணெய்தினர் காணு
யாருயிர் மருந்தே யந்நாட் டகவயிற்
காரெனத் தோன்றிக் காத்தனின் கடனெனெ."

(மணிமேகலை 28-வது காதை 156-161 வரிகள்)

மாசாத்துவானியம்ப உடன் மணிமேகலை கச்சியிற்சென்று, பஞ்சத்தினல் வருந்தினவர்களைக் காத்தருளினுள். கருவூருக்குங் கச்சிக்கு மதிகதூரமில்லை. அவ்விரண்டு பட்டினங்களுஞ் சோழமண்டலக் கரைக்கடுத்து, கிழக்குக்கணவாய்க்குக் குணபாலிருக்கின்றன. அந்நகர்களிருக்கும் நாட்டிற் கோர்மாரிதானுள்ளது. மேற்குமலைத்தொடருக்கு மேற்கேயிருக்கும் மலையாளத்திலு மதைச்சேர்ந்த நாடுகளிலும்மாத்திரம் இருமாரியுளவாகையாற் காஞ்சியில் மாரிவறங்கூரிற் கருவூரிலும் வறங்கூரும். கருவூரில் மாரிவறங்கூரிற் கச்சியிலும் வறங்கூரும். அத்தன்மையாற் கச்சியிற் பஞ்சம் நேரிட்டபோழ்து கருவூரிலும் நேரிட்டிருத்தல்வேண்டும். ஆகையாற் கச்சியிலிருந்த மாதவர்கள் திருவஞ்சைக் களத்திற்கேகினரேயல்லாது கருவூருக் கல்லவென்பது திண்ணம். 1877-மாண்டு இந்தியா முழுவதும் பரவிய பஞ்சநோய் தென்இந்தியாவையுங்கவர, சோழபாண்டிய நாடுகளிலுள்ள எண்ணிறந்த மாதவர்களும், கைத்தொழிலாளர்களும் திருவாங்கூர், கொச்சி இவ்விரண்டு நாடுகளையுமடைய அவ்விடத்தரசர்களவர்களைக் காலன்கையிற் கொடாமலாதரித்துணவூட்டி கீழ்கரை செழித்தவுட னவ்விடமனுப்பிவிட்டார்கள். இக்காலத்தில் நடந்தது போலவே 1800-வருடங்கட்கு முன்னும் நடந்திருக்கின்றது.

10. 4-முதல் 9-வரை வகுப்புக்கள் நீளுகையா லவைகளைச்சுருக்கி இங்ஙனமியம்புகின்றாம். ஓரரசன் மலைவளங்காண்பான் போதரல் சந்தோஷத்தின் பொருட்டு. அங்ஙனமதன் தலைப்பட்டினத்திலிருந்து தன்தேவி முதலியோரோடு போகில் பெருந்தூரம் போகலரிது. அதனுல் சேரன்செங்குட்டுவன் வஞ்சியிலிருந்துபுறப்பட்டுத் திருவாங்கூரின் வடபாகத்திலிருக்கும் பெரியாற்றங்கரையை யொருநாளிலடைந்தானென்பதற் கையமில்லை. இடையில் வேறெவ்விடத்

தாவது பாசறையடித்துத் தங்கியதாகவுங் காணப்படவில்லை. கருவூரிலிருந்து பெரியாற்றங்கரைக்குப்போகின் மூந்நூறுமயில் தூரம் பிரயாணஞ்செய்தல் வேண்டும். அங்ஙனஞ் செய்திருந்தாற் காவிரி முதலிய ஆறுகளைக்கடந்ததாக அடிகளுரைத்திருப்பார்.

மேலுங்கீழக்கரையிலுங் கருவூருக்குச் சமீபமாகவுங் கிட்டாதனவாய கந்தமூல பதார்த்தங்களையும், நாற்காற் பிராணிகளையும், பறவைகளையும், அவைகளினின்றுண்டாகும் பலன்களையுங் குன்றக் குறவர், அரசனுக்குக் காணிக்கைவைத்ததாகவுங் காண்கின்றது. கொற்கை பழற்பட்டபின்னர் திருமாபத்தினியானவள் குடபால் நோக்கி வைகையாற்றுக் கரைவழித் திருச்செங்கோட்டு மலையெய்தி யவ்விடமிருந்து, சேரநாட்டின்கணெய்தி ஓர்வேங்கைமரத்தின்கீழ் ஆவியை வெறுத்தாளென்றுங் காண்கின்றது. பெரியாறும் வைகையும் மேற்குக்கணவாயிலோரிடத்துதயமாகி முறையே கிழக்கும் மேற்குந் திசைகளைநாடிச்செல்கின்றவாகவுங் காண்கின்றது. இச்சங்கதிகளெல்லாஞ் சேர்த்து ஆலோசிக்குங்கால் வஞ்சியென்பது திருவஞ்சைக்களமென்றல்லாமல் கருவூரென்று முடிவாகாது.

11 இனி இரண்டாம் வகுப்பி லியம்பியிருக்கப்பட்டவைகளை, அற ஆராய்வாம்.

இளங்கோவடிகள் குணவாயிற் கோட்டத்தரசுதுறந்திருந்ததாக சிலப்பதிகாரந் தொடங்கியிருக்கின்றது. அதில், 'குணவாய்' என்பதின்னதென் றுரையெழுதியபெரியோர் கூறினரென்றியம்பினும், 'கோட்டம்' என்னும் பதத்திற்குக் கருத்து 'கோவில்' என அவர் தாமே யுரைத்திருக்கின்றார். தற்காலத்திற் கேரளத்திலரசனெழுந்தருளியிருக்குமிடத்திற்குக் கோயிக்கலென்றும், கோலகமென்றுங் கொட்டாரமென்றுங் கூறுவர். அம்மொழிகளெல்லாம்,

கோ - அரசன்
இல் — வீடு

என்னும் பதங்களிலிருந்து பிறந்தன; 'கோயம்' என்னும்பதமு மவ்வண்ணமே பிறந்து கோயிலென்னுஞ் சொல்லின் கருத்தையுடையது. 'கோட்டைவாரம்' என்னுஞ் சொற்களிலிருந்து 'கோட்டம்' என்னும் சொல்வந்ததாயும் அது குறுகியும், நீண்டும்,

'கொட்டாரம்' என்று வந்ததாயுங் காணுகின்றது. எங்ஙனமாயினு மெல்லாப்பதங்களுமோர் கருத்தையே கொள்கின்றன. 'குணவாய்' என்பது மேற்குறித்த சான்றோருரைத்தவண்ணமோர் ஊரென்பதற்கு அடியிடத்தைக்காணவில்லை. திருவஞ்சைக் களத்திற்கடுத்தோ தூரத்திலோ, அங்ஙனமோ ரூரிருப்பதாகக்காணப்படவுமில்லை. 'குணவாய்' என்பது கிழக்குப்பக்கமெனக் கருத்துறும். எதற்குக் கிழக்கென்றால், கோட்டையின் கிழக்கு. பெரும்பான்மையும் அரசர்கள் வாழுங்கோயில்கள் கோட்டைகளுக்குட் கட்டப்பட்டிருக்கும். இப்பொழுது மலையாளநாட்டிலிருக்கும் அரசகுடும்பங்களி லிளவரசர்களநேகருண்டு. அவர்களின் முதன்மையானவர்கட்குத் தனித்தனி இருப்பிடங்களுண்டு. அவைகளைப் பிரித்தறியும் பொருட்டு, வடக்குக் கொட்டாரம், அல்லது கோலகமென்றும், தெற்குக்கொட்டாரம் அல்லது கோலகம் என்றும், மற்றுத் திசைகளைச் சுட்டியும் அழைத்துவருவர். ஆகையால் 'குணவாயிற் கோட்டம்' என்பதைக் கிழக்குப் பக்கத்திலிருந்த அரண்மனையென்று முடிக்கவேண்டும். இருகாப்பியுங்களாற் கண்டவரைக்கும் அடிகள் சேரநாட்டை விட்டுப்போனதாகத் தோன்றவில்லை. மேலுந் தனிமையாக ஒருகோயிலிலிருந்து, தனது துறவறத்தை நடாத்துவதிற் றடையுள்ளதாயுங் காணவில்லை. அதனால் திருவஞ்சைக்களத்தின் கிழக்குப் பாகத்திலிருந்த அரண்மனையில் இளங்கோவடிகள் வீற்றிருந்ததாகவு மவ்விடத்திலே தானே அவர் சிலப்பதிகாரத்தை வரைந்ததாகவுங் காணப்படுகின்றன. மணிமேகலையைக் கூலவாணிகன் சாத்தனியம்ப மேற்படி அடிகள் கேட்டதாக அதன்பதிகங் கூறுகின்றமையா லக்கோயிலிற்றானே யதைக் கேட்டாரென்பதற்கு ஐயமில்லை. முதற்பகுப்பினுரைத்ததுபோற் சாத்தன் சேரவரசாங்கப் புலவராயிருந்தால், மணிமேகலையு மந்நாட்டிலுண்டானதாகத்தானே தீர்மானிக்கவேண்டும்.

12. ஆனால் திருவஞ்சைக்களம் மலையாளமொழி வழங்கிவருங் கேரளத்தினோர் பகுதியாகிய, கொச்சியரசர்க்குட்பட்ட நாட்டிலிருப்பதாக 3-ம் வகுப்பிலியம்பினோம். அவ்விடத்துத் தமிழிற் சிறந்த இரண்டுகாப்பியங்க ளெங்ஙன முண்டாயினவென்றாராய்த லவசரம்.

*

இன்பம் பொருந்திய தமிழ் மிகப்பழமை பெற்றதென்றும், வடமொழியை ஆரியர் இந்தியாவிற்குக் கொண்டுவந்து குடியேற்றுமுன், மத்திய ஆசியாவிலிருந்து, துரானியரதைக் குடிவைத்தார்களென்றும், ஸர்வுல்லியம் ஹன்றர் (Sir William Hunter) முதலான ஐரோப்பிய சாஸ்திரிகள் சம்மதிக்கின்றார்கள். இவ்வுலகின்கண் ஏறக்குறைய வழங்கும் தொள்ளாயிரம் பாடைகளுள்ளே, இபிரேயம், கிரீக், லத்தீன், சமஸ்கிருதம், தமிழ் இவ்வைந்தும், பண்டைக்காலமுதல் உய்ந்தவென்றும், ஏனைய நான்கைப்போலத் தமிழும்மேன்மையடைந்ததென்றும், அவர்களிலனேகர் சம்மதிக்கின்றார்கள். இம்மொழி, வந்தவழிக்குப் பற்பலவிடங்களிற் றன்னடையாளத்தை நிறுத்திவிட்டுத் தென்னிந்தியாவை அசையாதவிருப்பிடமாகக் கொண்டது.

13. அத்தமிழகத்தினெல்லைகளையும் அதன் காலவரம்புகளையுஞ்சற்றாராய்வாம். இப்போழ்துய்ந்திருக்கும் நூல்களிற் றொல்காப்பியம் மிகத்தொன்மையுடைய தென்பதற்கையமில்லை. அதிலெழுத்ததிகாரத்தில் ‘வடவேங்கடம், தென்குமரியாயிடைத் தமிழ்கூறுநல்லுலகத்து’ என்றும், பொருளதிகாரத்தில், ‘வண்புகழ் மூவர்தண்பொழில்வரைப்பின், நாற்பெயரெல்லையகத்தவர் யாப்பின் வழியது’ என்றுங்கூறப்பட்டிருக்கின்றன. இவைகளாற் றிருவேங்கடத்திலிருந்து கிழக்கும், மேற்கும் ஓர்வரியையவரையி னதற்குத்தெற்கும் கன்னியாகுமரிக்கு வடக்குமுள்ள நாடுகள்முழுவதும் தமிழ்நாடாம். அதன் கிழக்கு மேற்குவரம்புகள் கடல். மேற்கூறிய எல்லைகட்குளடங்கிய நிலப்பரப்பு, சோழசேரபாண்டியமண்டலங்களாகப் பகுக்கப்பட்டிருக்கின்றது.

14. இனி அம்மொழி இவ்விடத்து எந்தக்காலமுதற் பரவியிருக்கின்றதென்பதைச்சற்றுச் சிந்தனை செய்வாம். முச்சங்கங்களையும், மதுரையிற் பாண்டியர்களோங்கி வளரும்படி செய்தாதரித்து வந்தார்களென்பதற்கையமில்லை. முச்சங்கமென்றபோழ்தே ஒன்றன்பின் மற்றொன்று தொடர்ந்து வந்ததாக எண்ணுதற்கிடமில்லை. அவ்வண்ணந்தொடர்ந்து வந்திருப்பின் ஒருசங்கமென்றே கூறியிருப்ப. அதனால் ஒருசங்கங்கழிந்து மற்றொன்று தொடங்குமுன், அனேக ‘காலம், நூற்றாண்டுக்கணக்காக சென்றிருத்தல்வேண்டும். மாணிக்க

வாசக சுவாமிகளின் காலத்தை மதிக்கப்புறப்பட்டபோது, கடைச்சங்கத்தின் முடிபு கிறிஸ்து பிறந்தபின் முதல்நூற்றுண்டிலாயிருக்க வேண்டுமென்பதாகப் பல ஏதுக்களையுங்கொண்டு வித்துவான்-திருமலைக்கொழுந்துப் பிள்ளையவர்கள் கணித்திருக்கின்றார்கள். அதுபோலவே—தமிழகம் முழுவதையும் துயராழியிலழுத்திய, சென்னைக் கிறிஸ்தியன்காலேஜ், தமிழ்த்தலைமைப்பண்டிதராயிருந்த, கனம்பொருந்திய சூரியநாராயண சாஸ்திரிகளும், முறையே ஆராய்ந்த பின்னரவ்வண்ணமுரைத்திருக்கின்றார்கள். அக்கடைச்சங்கம்ஏறக்குறைய இரண்டாயிரம் வருடம் வாழ்ந்திருந்ததாகவும், தகுந்த காரணங்களுடன் கூறியிருக்கின்றார். அக்காலவரம்பிற்கு முன்ன ரனேககாலஞ் சங்கமில்லாதிருந்ததாயு மவ்வெறுங்காலத்திற்கு முன் இடைச்சங்கமுய்ந்திருந்ததாகவுங் காணப்படுகின்றது. இவ்விதங்கணக்கிடிற் கிறிஸ்து பிறக்க நாலாயிரம் வருடங்கட்குமுன் இடைச்சங்கத்தின் முடிவாயிருத்தல் வேண்டும். அப்படியல்லாவிடினுஞ் சூரியநாராயண சாஸ்திரியார் இடைச்சங்கத்தின் முழுக்காலத்தை, 3700 வருடமாக தீர்மானித்திருக்குமுறைக்கு அதன் ஆரம்பம் ஏறக்குறைய கிறிஸ்து பிறக்க, ஆறுயிரம் வருடங்கட்கு முன்னதாகவிருத்தல்வேண்டும் இதைப்பிழைப்படுத்தற்கு காரணங்காண்கிலம். இந்துக்களில் துராணியர், ஆரியர்க்குமுன் குடியேறினரென்பதற்கு வழக்கில்லை. துராணியர் ஆரியர்க்குமுன் நாகரீகமடையாவிட்டாலும், அவருடனுவது அடைந்திருப்பார்களென்பதற்கும் வழக்கில்லை. ஆரியநாகரீகம், எகிப்து (Egypt) பாபிலன் (Babylon) அஸ்ஸிரியா (Assyria) கிறீஸ் (Gresee), உரோம் (Rome)இவர்களுடைய நாகரீகங்கட்குமுன் என்பது யாவருஞ்சம்மதிக்கின்றகொள்கை. சமீபகாலத்திற் பாபிலனிற் (Babylon) கிடைத்த சிலாலிகிதங்களிலிருந்து, அவ்விடத்தரசுபுரிந்திருந்த, கம்முராபி (Khammoorabi) என்னும் மன்னன், கிறிஸ்து பிறக்க இரண்டாயிரத்திருநூறு வருடங்கட்குமுன் அதன் பிற்காலத்தில் மோஸேஸ் (Moses) வாயிலாகக் கடவுள் இஸ்றேலர் (Israel) கட்கருளியதாகக் கூறப்படும் பத்துக்கட்டளையைக்காட்டிலும் மேன்மைபெற்ற சட்டங்களைத்திரட்டிக் குடிகளறியும்படி விளம்பரஞ் செய்து, பின்னர்க் கற்களில் வரைந்ததாக, கண்டுபிடிக்கப்பட்டிருக்

கின்றது. இவ்வாறோர்நாடு அரசாட்சியிலுயர்ந்தோங்க வேண்டுமாயின் தன் நாகரீகம் மேன்மையான நிலையையடைந்ததாயிருக்கவேண்டும்.

ஆகையால் மேற்குறித்த காலத்திற் பாபிலன் (Babylon) மேலான நாகரீகத்தையடைந்திருந்த தென்பதற்குச்சந்தேகமில்லை. ஆரியருடையவும், துரானியருடையவும் நாகரீகம் பாபிலன் (Babylon) முதலான இராச்சியங்கள் நாகரீகமடையுமுன்னரென்று பீடிகையிட்டிருக்கின்றும். ஒரு நாடு நாகரீகத்தாலடையும் பயன் அரசாட்சியின் திறமையைத்தவிர வேறுபலவிதத்தாலும் மேன்மையையடையுமென் றியம்பினும். அவைகளிலொன்று அந்நாட்டுமொழி. அக்கோட்பாட்டிற்குக்கரி-கிரீக்-லத்தீன், இங்கிலீஷ்பாடைகளேயாம். தமிழ்மொழியானது முச்சங்க காலங்களிலும், மிகமாண்படைந்திருந்ததென்பது அக்காலங்களிலுண்டான நூல்களாற் காணப்படுகின்றது. தொல்காப்பிய மிடைச்சங்கநூலென்பதை முன்னரே நிலைநிறுத்தியிருக்கின்றுரறிவுடையோர். அதன்சாஸ்திரபூர்த்தியையும் (Scientific precision) ஆழ்ந்தகருத்துக்களையும் சிறந்தசொற்களால் ஆக்கப்பட்டிருப்பதையும் நோக்குங்கால், அக்கோட்பாட்டிற்கு எதிராக முடிவு கூறுதலரிது. ஆகையாலதன்வயது நாலாயிரம்வருடங்கட்கு குறைவுபடாது. தலைச்சங்கம் இடைச்சங்கத்திற்குமுன்னுனதினல், தென்னிந்தியாவில் தமிழின் பிராயமும் தமிழகத்தின் துவக்ககாலமும் கணக்கிடில் 4000-வருடங்கட்கு நிரம்ப மேலதிகமென்பதற்குத் தடையில்லை. எவ்விதத்தாயினும், தொல்காப்பியத்திற்றமிழகத்தினெல்லை கூறியகாலம் கிறிஸ்து பிறக்குமுன் நாலாயிரம் வருடங்களும் பின் இரண்டாயிரம் வருடங்களுமாக, ஆறுயிரம் வருடங்கட்கு முன்னென்பதற்குப்போராட்டமில்லை.

(இன்னும் வரும்.)

தா. பொன்னம்பலம் பிள்ளை,

M. R. A. S.

———

திருச்சிற்றம்பலம்.

ஆகுபெயரன்மொழித்தொகை ஆராய்ச்சி.

(கஎஉ-ம்பக்கத் தொடர்ச்சி.)

இனிச்சண்முகம்பிள்ளையவர்கள் தாம் விளக்க எடுத்துக்கொண்ட நுண்பொருளெல்லாந் தருக்க விதியைப் படுத்துச் செவ்விதின் ஆராய்ந்தரியதோர் நல்லுரை எழுதினாராயினும், ஆசிரியர் சிவஞான யோகிகள் பரிமேலழகியார் உரைக்கருத்துத் தேறாது அவருரைக்குக்குற்றங்கூறினாரென்றவருரைத்த பகுதியில் மாத்திரம் நாங்கருத்தொருப்படுகின்றிலோம். ஆசிரியர் சிவஞானயோகிகள் பரிமேலழகியார் உரைக்குறிப்புண்மை நன்குணர்ந்து அவ்வுரை ஆண்டைக்கொருசிறிதும் இயையாதென்னுங்கருத்துப்பற்றியே அதனை மறுத்தருளினர். அவ்வியல்பு ஈண்டுவிளங்கவிரிப்பாம்; இனிக்கனங்குழை என்னுந்தொகையே ஆகுபெயரன்று, மற்று அதன் புறத்துத்தொக்க மகள் என்பதே அதுவாம் என்னும் பரிமேலழகியார் கருத்து சிவஞான யோகிகள் உணராதாரல்லர்; வேறுஅதனை அவ்வாறுரைத்தல் தொல்லாசிரியர் புலனெறிவழக்கோடு இயைவதன்றென்பதே அவர் அதனை மறுத்தவாறாம். என்னை? ஒருவாக்கியத்துளியைந்து விரிந்து நின்ற ஓர் இயற்பெயர் தன்பொருளிற் றீர்ந்து ஆகுபெயர்ப் பொருட்கண் வருதலே முறையாமன்றித் தொகைநிலைப் புறத்துத் தொக்க ஒரு சொன்மேல் அதுவருதல் பண்டைப் புலனெறிவழக்கிடைக்காணப்படாப் புதுமைத் தாகலினென்க. அற்றேலஃதாக, கைக்கிளைத்திணைப் பொருளையப்பற்றி வருகின்ற இத்திருவாக்கின்கட் 'கனங்குழை' என்பது 'அணங்குகொல், ஆய்மயில்கொல், மாதர்கொல்' என்பவற்றோடு திணைவழுவின்றி இயைதற்கேற்பப் பொதுமையின் நிற்கற்பாலதாகலின், அவிரோதநயனஞ்செய்து இணக்குமுறைபால் அன்மொழித் தொகையாய் நின்ற அதன்மேல் ஆகுபெயர் வந்ததென்று பரிமேலழகியார் உரைகூறினாராகலின் அவ்வுரை வழுப்படுதல் யாங்ஙனமெனின்;—நன்று சொன்னாய், தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் கருத்தறிந் தெழுதிற்றின்மையின் பரி

மேலழகியார் கூறுமவ்வுரை ஈண்டைக்கொருசிறிதும் பொருந்துமா றில்லை. 'அணங்குகொல்' என்னுமித்திருவாக்கு அகத்திணைப்புறனுங் கைக்கிளையாயினன்றே பரிமேலழகியாருரை பொருத்தமாம். கந்தருவவழக்கத்தினோ டொத்த காமச்சுவையின் விழுப்பம் நாடகவழக்குண்மை நன்குதழீஇவருஞ் சான்றோர் புலனெறி வழக்கிடைப் பட்டவாற்றாற் றெரித்துணர்த்துவான் புகுந்த ஆசிரியர் திருவள்ளுவனார் அகத்திணைப் புறனுங் கைக்கிளை பெருந்திணையிரண்டனை யுங் களைந்து அன்பினைந்திணையொழுக்கத்தினையே களவுகற்பு எனப் பகுத்தெடுத்துக் கொண்டோதியருளினார். காமத்துப்பாலின் முதலேழதிகாரங்களுங் களவொழுக்கத்தினையே விரித்துரைக்கின்றன. அகத்திணை யொழுக்கம் பயின்று வருகின்ற இப்பகுப்பின்கட் கைக்கிளை மயங்குதற்கு இடம்பெறாதென்பதும், அங்ஙனம் வருமாயின் திணைமயக்கமாய் வழுப்படுமென்பதும் விளக்கியவன்றே தெய்வப் புலமை நக்கீரனார் இறையனார் களவியலுரையில் "இனி ஒரு சாரார் உரைக்குமாறு" என்றெடுத்துக்கொண்டு கைக்கிளையிலக்கணங்கூறி "ஈங்ககத்திணையுள் எஃதுரைப்பது திணைமயக்கமாகலின் மேலதே பொருள்" என்று பிறன்கோண் மறுத்துத் தன்கோ ணிறுத்துவாராயினதூஉ மென்க. அற்றேல், திருக்கோவையாரிற் காட்சி ஐயந் தெளிதல் நயப்பு என்னுங் கைக்கிளைத்துறைகளுன்குங் கூறியவா றென்னையெனின்;—அங்ஙனங்கூறுதல் திணைமயக்கமாய் வழுப்படுமாயினும் களவிக்கோவையின்கண் அவை வருங்கால் வனப்புடையவாய்ச் சிறந்துகாட்டலின் அமைத்துக் கொள்ளப்படு மென்பதனை ஆண்டுப் பேராசிரியர் 'இந்நான்குபாட்டும் ஒருவருள்ளக் கருத்தை ஒருவரறியாத ஒருதலைக்காமமாதலிற் கைக்கிளைப்பால. அகத்திணையின்கட் கைக்கிளைவருதல் திணைமயக்கமாம்பிறவெனின்;—கைக்கிளை முதற் பெருந்திணையிறுவா யெழுதிணையுள்ளுங் கைக்கிளையும்பெருந்திணையும் அகத்தைச்சார்ந்த புறமாயினும் களவிக்கோவையில் எடுத்துக் கோடற்கட் காட்சி முதலாயின சொல்லுதல் வனப்புடைமை நோக்கிக் கைக்கிளைதழீஇயினார். பெருந்திணை தழுவுதல் சிறப்பின்மையின்நீக்கினார்" என்றினிதுவிளக்கினார். அல்லதூஉம், ஆண்டுத் திருவாதவூரடிகள் இயற்கைப்புணர்ச்சி கூறுகின்றாராதலின் அதன்

கண் அவ்வாறு கூறுதற்கமையுமென்பது. இயற்கைப்புணர்ச்சிகூறும் வழிக்கைக்கிளைமயங்கப் பெறுதலுமாமெனவும், களவியலுள் அவ்வாறு வருதலாகாதெனவும் ஆசிரியர் தொல்காப்பியனார்.

"முன்னைய நான்கும் முன்னதற் கென்ப"

எனக்கூறு மாற்றானுமுணர்க. இங்ஙனமே இறையனார்களவியலுரையில் நக்கீரனார் அகவொழுக்கத்தின்கண் வருதலாகாவென விலக்கிய 'நடுங்கநாட்டம்' முதலானதுறைகளைத் திருவாதவூரடிகள் வேறோர் நயம்பற்றிப் பொருந்துமாறு ஆங்காங்கு வழுவின்றி யமைத்து ஓதுவர். அடிகள்கொண்ட நுண்பொருணய முணராத தஞ்சைவாணன் கோவையுடையாரும் பிறரும் அவரைப்போற் றுறையமைக்கப் புகுந்து அந்நயம் பொருத்தமாட்டாமல் இடர்ப்பட்டு இழுக்குறுதலுங்காண்க. இவை யெல்லாம் ஈண்டுவிரிப்பிற் பெருகுமாதலிற் சமயம் வந்துழி விளக்குவாம். எனவே, திருக்கோவையாரிற் கைக்கிளை இயற்கைப்புணர்ச்சிக்கு முன்னிகழ்ந்து அதனைச்சிறப்பித்துக் காட்டுதலின் ஆண்டைக்கு அது பெரிதும் பொருத்தமாதலே யன்றி வழுப்படுதல் ஒருவாற்றானுமில்லை யென்பது துணியப்படும். ஈண்டுத் திருவள்ளுவநாயனார் அவர்போலன்றி அகனைந்திணையுட்பட்ட களவொழுக்கமே வகுத்துணர்த்துகின்றாராதலின், பரிமேலழகியார் கைக்கிளைத்திணையாதற்குச் சிறந்த ஐயந் தெளிவு முதலியவற்றை இவ்வதிகாரத்தின்கட் புகுத்துச்சொல்லுதல் பெரியதோர் மாறுபாடாதல்காண்க. ஆண்குழுவிற் றன்னோ டொப்பாரு மிக்காரு மில்லாத தலைமகனும் பெண்குழுவிற் றன்னோ டொப்பாரு மிக்காருமில்லாத தலைமகளும் பால்வழியேசென்று ஓரிடத் தொருங்குதலைப்பெய்து "ஓராவிற் கிருகோடு தோன்றினாற்போல" ஒருமையுறுங் களவொழுக்கமே ஈண்டுணர்க்கப்படுதலின், மக்கட்டன்மையுடைய ஐயந்தெளிவுமுதலியன கூறுதல் ஈண்டைக்கு வழுவுடையாய் முடியும். கந்தருவர் தெய்வத்தன்மையுடையராகலிற் கந்தருவவழக்கத்திேனா டொக்குமிக்களவியலும் தெய்வப் பெற்றிமையுடைய தலைமக்கள் ஒழுகலாறு தெரிக்கு மியல்புடையதாய் இல்லதினியது நல்லதென நாட்டப்படும் நாடகவழக்காய் வருதல் காண்க. உலகத்தார்க்குக் காமச்சுவையினியல்பை விரித்துப் போதிக்கின்ற ஆசிரியர்

அவர் தமக்குட் பொதுமையான் நிகழும் ஓரின்ப நெறியினை விளக்கலுறின், அவர் அதுகொண்டு திருந்தமாட்டாராகலின், அவரினுங் காட்டிற் சிறந்த புத்தேளிர்மாட்டு நடைபெறும் விழுமியதோர் ஒழுகலாறு கடைப்பிடித்து அதனை அவரறிவின் முன்னிறுத்தி அவர் காமவின்ப நுகர்ச்சிக்கோர் நன்மாதிரியாக வைத்துப் போதிப்பான் புகுதலின் இது கந்தருவவழக்கத்தினோ டொப்பதாயிற்று. கடையாயினரைத் தெருட்டுமிடத்து அவரொழுகலாற்றோடு ஒருபுடையொத்துப் பலபுடையொவ்வாது சிறந்த தெய்வவொழுக்கங் காட்டி நெறிப்படுத்துதலே முறையாதல் களவியலுரைப் பாயிரத்தினுங் காண்க. ஆகலின், தெய்வத்தன்மை தீண்டப்பெறு ஏனையியற்கைப் புணர்ச்சி முதலியவற்றுக்கண் ஐயந்தெளிவு முதலியன வருதல் என்னையென்றல் கடாவன்மையறிக. இங்ஙனந் தெய்வத்தன்மையுடைய களவொழுக்கத்திற் றலைமகனுந் தலைமகளும் பால்வழியொருங்குதலைப்பெய்த அக்கணத்தே 'புனலோடும் வழிப் புற்சாய்ந் தாற்போல' த்தம்முணர்வெல்லாம் வேட்கைவயப்பட ஒருவரையொருவரின்றியமையாராய் வரம்பறியா அன்பிற்றுளும்பி முயங்கியின்பந்துய்ப்ப வாகலின், ஐயமுந் தெளிவும் நிகழ்தற்கிடன் ஆண்டில்லையென்க. அன்பிற்குறைபாடுள்வழியே ஐயமுந்தெளிவும்முறைமுறையேநிகழும்: அவ்வாறின்றி அதுமுதிர்ந்து நிரம்புமெனின் ஆண்டவை நிகழாமை ஒருதலையாமென்க. இப்பெற்றியெல்லாம் ஒருங்குணர்ந்த தெய்வப்புலமை நக்கீரனூர் இந்நூணுக்கமெல்லாந் தமதுரையில் இனிது விளக்குதலின், அம்மெய்யுரைப் பொருள் கொண்டு முடிபறிந்துகொள்க. இவர் கண்டருளியமெய்யுரையோடு ஓரோவிடங்களில் முரணி நச்சினார்க்கினியர் வேறுரையுரைப்பர். அவை பொருந்தாமை இரண்டுரையினையும் ஒத்து நோக்கியுணர்க. நக்கீரனாருரையோடுமாறுபடாவிடத்தெல்லாம்நச்சினார்க்கினியருரை பிரமாணமாமென்க. இது கிடக்க.

(இன்னும் வரும்.)

நாகபட்டினம்—வேதாசலம்பிள்ளை,
'ஞானசாகர' ப்பத்திரிகாசிரியர்,
சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்.

சாத்தியதன்மவிகலம்.

சாத்தியதன்மவிகலமாவது சாத்தியதன்மம் தன்கணுள்ளதாகக்கொள்ளப்படாதபொருளை அன்வயதிட்டாந்தமாகக்கூறுவதாம்.

உதாரணம்:—(ஆங்கிலநூல் வல்லாரைநோக்கி) 'புகைதிரவியம்; இயக்கமுடைமையால்; யாது யாது இயக்கமுடையது அது அது திரவியம்; நெருப்புப்போல' என்பதாம். இதனுள் சாத்தியதன்மம் திரவியமாதல். அஃது ஆங்கிலநூல் வல்லாரால் நெருப்பின்கணுள்ளதாகக் கொள்ளப்படாமையால் இக்கூற்று அவருக்குச் சாத்திய தன்மவிகலமாம். இவ்வாறு சாத்தியப்பொருள் குறையக்கூறுவனவெல்லாம் இத்திட்டாந்தப் போலியென அறிக.

சாத்தியம்துணிபொருள். அது பக்கப்பொருளுக்குத்தன்மமாய் நிற்றலாற் சாத்தியதன்ம மெனப்பட்டது. சாத்தியமாகிய தன்ம மெனவிரியும். தன்மம் விசேடணம். எடுத்துக்காட்டிய 'புகைதிரவியம்'என்னும்பக்கவுறுப்பில் பக்கப்பொருள்-புகை. துணிபொருள்-திரவியமாதல். அதனை விசேடணமாகவுடையது (புகைதிரவியமாதலையுடையது) என்பதற்கீடாகப் புகைதிரவியமெனப்பக்கவுறுப்புக் கூறப்பட்டமை காண்க. இவ்வாறே மலைநெருப்புடைத்து என்பதனுள், பக்கப்பொருள்-மலை. துணிபொருள்- நெருப்பு அல்லது நெருப்புடைமை. அதுவும், முன்போலப்பக்கப்பொருளை விசேடித்து நிற்றல் கண்டுகொள்க.

புகையும் புகையுடைமையும் ஒன்றுதல் போல நெருப்பும் நெருப்புடைமையும் ஒன்று மெனவறிக.

உபயதன்மவிகலம்.

உபயதன்மவிகலமாவது சாதன சாத்தியங்கள் இரண்டுமுள்ளதாகக் கொள்ளப்படாத பொருளை அன்னுவயதிட்டாந்தமாகக் கூறுவது. அது, சன்னு அசன்னு என இருவகைப்படும்.

சன்னு.

அவற்றுள் சன்னுவுள்ள உபயதன்மவிகலமாவது தான் உள்ளதாகத் தன்கண் சாதன சாத்தியங்கள் இல்லனவாகத் திட்டாந்தப்

பொருள் கூறுவது. உதாரணம்.--(நையாயிகரைநோக்கி) 'புகைதிட்ப முடையது; உருவமுடைமையால்; யாது யாது உருவமுடையது அது அது திட்பமுடையது; காற்றுப்போல' என்பதாம். இத னுட் கூறப்பட்ட திட்டாந்தப்பொருள் காற்று. அது நையாயிக ரால் உள்ளதாகக்கொள்ளப்படுவது. எடுத்துக்கொண்ட சாதன சாத்தியங்களாகிய உருவமுடைமையும் திட்பமுடைமையும் அவ ரால் அக்காற்றின்கணுள்ளனவாகக்கொள்ளப்படாமையால் அவர் க்கு அக்காற்றின் கண் அவையில்லனவாதலின் இஃது அவர்க்குச் சன்னுவுள்ளவுபயதன்மவிகலமாயிற்று.

காற்றின்கணுள்ளதாக ஆங்கிலநூல் வல்லாராற் கொள்ளப் பட்ட திட்பமுடைமையை, நையாயிகர் படைப்புக்காலத்திற் காற் றின்கண் கடவுளால் சஞ்சீகரணத்தாற் கூட்டப்பட்டதும் அணு வாகிக்கலப்புற்றதுமாகிய பிரதிவி யப்புக்களின் கூறதாகக் கொள் ளுவதன்றி காற்றின்கட் டிட்பமுடைமையுள்ளதாகக்கொள்ளார்.

அசன்னு.

அசன்னுவுள்ளவுபயதன்மவிகலமாவது உள்ளதாகக்கொள்ளப் படாதபொருளைத் திட்டாந்தமாகக்கூறுவது. உதாரணம்:—(ஆங்கில நூல் வல்லாரைநோக்கி,)'காலம் திரவியம்; பரிமாணமுடைமையால்; யாது யாது பரிமாணமுடையது அது அது திரவியம்; ஆகாயம் போல.' என்பதாம். இதனுட் கூறப்பட்ட திட்டாந்தப்பொருள் ஆகாயம். அஃது அவரால் ஒருபொருளெனக் கொள்ளப்படாமை யால் அஃது அவருக்கு இல்லதாயிற்று. ஆகவே அதன்கணுள்ள தாகக்கூறப்பட்ட சாதன சாத்தியங்களாகிய பரிமாணமுடைமையுந் திரவியமாதலும் அவர்க்குப் பிறிதோரிடத்து வெளிப்பட்டுள்ளன வாயினும், எடுத்துக்கொண்டதிட்டாந்தப்பொருளில் வெளிப்படா மையால் இஃது அவருக்கு அசன்னுவுள்ளவுபயதன்மவிகலமாயிற்று. சன்னு-உள்ளது. அசன்னு-இல்லது. மற்றும் இவ்வாறு வருவன வெல்லாம் இத்திட்டாந்தப்போலியென அறிக. சாதனதன்மமுத லிய நான்கும் வியாத்தியுணர்வையுண்டாக்கும் வலியின்றி அனுமிதி யுணர்வைப்பயவாது திட்டாந்தப்போலியாயின.

அநன்னுவயம்.

அநன்னுவயமாவது ஏது சாத்தியங்களின் றொடர்பையுணர்த்தும் அன்னுவயவியாத்திவசனமின்றித் திட்டாந்தவுறுப்புக் கூறுவது. உதாரணம்—‘இம்மலைநெருப்புடைத்து ; புகையுடைமையால்; பாகசாலைபோல’ என்பதாம். இதனுள் யாது யாது புகையுடைத்து அது அது நெருப்புடைத்து என்னும் அன்னுவயவியாத்தி வசனம் கூறப்படாமையால் இஃது அநன்னுவயமாயிற்று. மற்றும் இவ்வாறு கூறுவனவெல்லாம் இத்திட்டாந்தப் போலியென வறிக. ஏதுப்பொருளுடையனவெல்லாம் துணிபொருளையுமுடையன வென்னும் வியாத்தியுணர்வு எளிதிற்றோன்றாமையால் அநுமிதியுணர்வுக்குத் தடையாய் இது திட்டாந்தப்போலியாயிற்று.

விபரீதான்னுவயம்.

விபரீதான்னுவயமாவது திட்டாந்தவுறுப்பாகிய அந்நுவயவாக்கியத்தை முறைபிறழக் கூறுவது. உதாரணம்:—‘இம்மலை நெருப்புடைத்து; புகையுடைமையால்; யாது யாது நெருப்புடைத்து அது அது புகையுடைத்து; பாகசாலைபோல’ என்பதாம். இதனுள் யாது யாது புகையுடைத்து அது அது நெருப்புடைத்து எனக்கூறக்கடவதாயுள்ள அன்னுவய வாக்கியத்தை, யாது யாது நெருப்புடைத்து அது அது புகையுடைத்து என விபரீதமாகக் கூறுதலால் இது விபரீதான்னுவயமாயிற்று. மற்றும் இவ்வாறு கூறுவன வெல்லாம் இத்திட்டாந்தப்போலியெனவறிக. விபரீதம்-மாறுபாடு. இங்ஙனம் விபரீதமாகக்கூறுதலால் ஏதுவின்வியாபகம் துணிபொருள் என்னும் வியாத்தியுணர்வு தோன்றாது அநுமிதிக்குத்தடையாதலால் இது திட்டாந்தப்போலியாயிற்று.

வைதன்மிய திட்டாந்தப் போலி.

இனி வைதன்மிய திட்டாந்தப்போலியும் ஐவகையாம். அவற்றின் பெயரும் உதாரணமும் பின்வரும் வரையறையுட் காண்க.

வைதன்மியதிட்டாந்தப் போலிவரையறை.

எண்	பெயர்.		பக்கம்.	ஏது.	திட்டாந்தம்.	குறிப்பு.
க	சாத்தியாவியா விருத்தி.		காற்று திரவியம்.	பரிசமுடைமையால்.	யாது யாது திரவியமன்று அது அது பரிசமுடையதன்று; காலம்போல.	நையாயிகரை நோக்கிய கூற்று.
உ	சாதனவியா விருத்தி.		தண்ணீர் ஒளியில்லது.	நிறமின்மையால்.	யாது யாது ஒளியுள்ளது அது அது நிறமுள்ளது; நெருப்புப் போல.	ஆங்கிலநூல்வல்லாரை நோக்கிய கூற்று.
ங	உபயாவியாவிருத்தி.	உண்மையின்	நெருப்பு உருவமில்லது.	சுவையில்லாமையால்	யாது யாது உருவமுள்ளது அது அது சுவையுள்ளது; தண்ணீர் போல.	ஷை
		இன்மையின்	காற்று உருவமில்லது.	வடிவமில்லதாதலால்.	யாது யாது உருவமுள்ளது அது அது வடிவமுள்ளது; இருள்போல.	நையாயிகரை நோக்கிய கூற்று.
ச	அவ்வெதிரேகம்.		இம்மலை நெருப்புடைத்து.	புகையுடைமையால்	ஆற்று வெள்ளம் போல.	பொதுக் கூற்று.
ரு	விபரீதவெதிரேகம்.		இம்மலை நெருப்புடைத்து.	புகையுடைமையால்.	யாதுயாதுபுகையில்லாதது அதுஅதுநெருப்பில்லாதது;ஆற்றுவெள்ளம் போல.	ஷை

சாத்தியாவியாவிருத்தி.

சாத்தியாவியாவிருத்தியாவது சாத்தியாபாவத்துக்கு நிலைக்களமாகப் பிரசித்தமில்லாததொன்றை (சாத்தியப்பொருளுக்கு நிலைக்களமாக வெளிப்பட்டிருப்பதை) வெதிரேகதிட்டாந்தமாகக் கூறுவது. உதாரணம்-(நையாயிகரைநோக்கி) 'காற்று திரவியம்; பரிசமுடைமையால்; யாது யாது திரவியமன்று அது அது பரிசமுடையதன்று; காலம்போல.' என்பதாம். இங்கு எடுத்துக்கொண்ட சாத்தியப்பொருள்-திரவியமாதல்; அதனது அபாவம்-திரவிய மின்மை; அதற்கிடமாகப் பிரசித்த மில்லாதது (திரவியமாகப்பிரசித்தமாவது) நையாயிகருக்குக் காலப்பொருளாதலால் அவருக்கு இது சாத்தியாவியாவிருத்தியாயிற்று. மற்றும் இவ்வாறு வருவனவெல்லாம் இத்திட்டாந்தப்போலி யெனவறிக. வியாவிருத்தி-வேறுபாடு. அவ்வியாவிருத்தி-வேறுபாடின்மை (ஒற்றுமையுடைமை.) திட்டாந்தப்பொருள் சாத்தியத்தால் ஒற்றுமையுடைத்தாயிருத்தலால் இது சாத்தியாவியாவிருத்தி யெனப்பட்டது.

சாதனாவியாவிருத்தி.

சாதனாவியாவிருத்தியாவது சாதனாபாவத்துக்கு நிலைக்களமாகப் பிரசித்தமில்லாத தொன்றை, (சாதனப்பொருளுக்கு நிலைக்களமாகி யிருப்பதை) வெதிரேக திட்டாந்தமாகக்கூறுவது. உதாரணம்—(ஆங்கில நூல்வல்லாரை நோக்கி) 'தண்ணீர் ஒளியில்லது; நிறமின்மையால்; யாது யாது ஒளியுள்ளது அது அது நிறமுள்ளது; நெருப்புப்போல' என்பதாம். இதனுட் கூறப்பட்ட சாதனப்பொருள்-நிறமின்மை; அதன் அபாவம்-நிறமுடைமை; அதற்கிடமாக அவர்க்குப் பிரசித்தமில்லாதது (நிறமுடையதாகக் கொள்ளப்படாதது)-நெருப்பு; அதனை அவர்க்கு வெதிரேக திட்டாந்தமாகக் கூறுதலால் இது சாதனாவியாவிருத்தியாயிற்று. மற்றும் இவ்வாறு கூறுவனவெல்லாம் இத்திட்டாந்தப் போலியெனவறிக.

உபயாவியாவிருத்தி.

உபயாவியாவிருத்தியாவது சாத்தியசாதனங்களின் அபாவத்துக்கு நிலைக்களமாகாத தொன்றை, (சாத்திய சாதனங்களினிலைக்

களமாயிருப்பதை) வெதிரேக திட்டாந்தமாகக்கூறுவது. அஃதுண்மையினுபயாவியாவிருத்தி, இன்மையினுபயாவியாவிருத்தி யென இருவகைப்படும்.

உண்மையினுபயாவியாவிருத்தி.

உண்மையினுபயாவியாவிருத்தியாவது சாத்திய சாதனங்களுக்கு நிலைக்களமாக வெளிப்பட்டிருப்பதொன்றை வெதிரேகதிட்டாந்தமாகக் கூறுவது. உதாரணம்—(ஆங்கிலநூல் வல்லாரை நோக்கி) 'நெருப்பு உருவமில்லது; சுவையின்மையால்; யாது யாது உருவமுள்ளது அது அது சுவையுள்ளது; தண்ணீர்போல்' என்பதாம். இங்கு எடுத்துக்கொண்ட சாத்தியசாதனங்கள்-முறையே உருவமின்மையும், சுவையின்மையும்; இவ்விரண்டும், ஆங்கிலநூல் வல்லாருக்குப் பிரசித்தமாயுள்ள தண்ணீரின்கண் ணின்மையால் இஃதவருக்கு உண்மையினுபயாவியாவிருத்தி யாயிற்று. மற்றும் இவ்வாறு கூறுவனவெல்லாம் இத்திட்டாந்தப்போலி யென வறிக.

இன்மையினுபயாவியாவிருத்தி.

இன்மையினுபயாவியாவிருத்தியாவது—உள்ளதாகக் கொள்ளப்படாதபொருளைத்திட்டாந்தமாகக் கூறுவது. உதாரணம்—(நையாயிகரைநோக்கி) 'காற்று உருவமில்லது; வடிவமின்மையால்; யாது யாது உருவமுள்ளது அது அது வடிவமுள்ளது; இருள்போல' என்பதாம். இதனுட் கூறப்பட்ட திட்டாந்தப்பொருள்-இருள். அதனை நையாயிகர் ஓர் பொருளெனக்கொள்ளாமையால், சாத்திய சாதனபாவங்களாகிய உருவ வடிவங்களுக்கு நிலைக்களமாகி வியாவிருத்தி தோன்றாதாகையால் இஃதவர்க்கின்மையினுபயாவியாவிருத்தியாயிற்று. மற்றும் இவ்வாறு கூறுவனவெல்லாம் இத்திட்டாந்தப்போலியாமென வறிக. சாத்தியாவியாவிருத்தி முதல் நான்கும் வியாத்தியுணர்விற்குக் கருவியாகாமையால் திட்டாந்தப்போலியாயின.

அவ்வெதிரேகம்.

அவ்வெதிரேகமாவது தனது உறுப்பாகிய வெதிரேகவாக்கியமின்றிக்கூறுவது. உதாரணம்:—'இம்மலை நெருப்புடைத்து; புகை

புடைமையால்; ஆற்றுவெள்ளம் போல' என்பதாம். இதனுள் 'யாது யாது நெருப்பில்லாதது அது அது புகையுமில்லாதது' என்னும் வெதிரேகவாக்கியங் கூறப்படாமையால் இஃது அவ்வெதிரேகமாயிற்று. மற்றும் இவ்வாறு வருவனவெல்லாம் இத்திட்டாந்தப் போலி யெனவறிக. வெதிரேக வாக்கியமின்மையால் வெதிரேக வியாத்தி யெளிதினுணரப்படாது அநுமிதியுணர்விற்குத் தடையாகி இதுதிட்டாந்தப்போலி யாயிற்று.

விபரீத வெதிரேகம்.

விபரீத வெதிரேகமாவது தன்னுறுப்பாகிய வெதிரேகவாக்கியத்தை மாறுபடக்கூறுவது. உதாரணம்—'இம்மலை நெருப்புடைத்து; புகையுடைமையால்; யாது யாது புகையில்லாதது அது அது நெருப்புமில்லாதது; ஆற்றுவெள்ளம் போல' என்பதாம். இதனுள் 'யாது யாது நெருப்பில்லாதது அது அது புகையுமில்லாதது' எனத் துணிபொருளின்மையை முற்கூறி ஏதுவினின்மையைப் பிற்கூறக் கடவதாகிய வெதிரேக வாக்கியத்தை, 'யாதுயாது புகையில்லதுஅது அது நெருப்புமில்லது' என ஏதுவின்இன்மை முன்னும் துணிபொருளின் இன்மை பின்னுமாகவைத்து முறைபிறழக் கூறுதலால் இது விபரீத வெதிரேகமாயிற்று. மற்றும் இவ்வாறு வருவனவெல்லாம் இத்திட்டாந்தப் போலி யென வறிக.

வெதிரேகம் மாறுபடக்கூறுதலால், ஏதுவின் இன்மையுள்ளவிடத்தும் துணிபொருளுளதாயிருத்தல்பற்றி வியாத்தி யுணர்வின்றும். அதனல் அநுமிதியுணர்வும் உண்டாகாமையால் இதுதிட்டாந்தப் போலியாயிற்று.

இங்ஙனங்கூறிமுடித்த பக்கப்போலி, ஏதுப்போலி, திட்டாந்தப் போலி என்னும் மூவகைப்போலி யுறுப்புக்களுள் ஒன்றுமில்லாத நல்லுறுப்புக்களாலமைந்த வாக்கியங்களே சதநுமானப் பிரமாணமாகுமென இதனலறியத்தக்கதாயிற்று.

அநுமானவிளக்கம் முற்றும்.

மேலும் இந்த அட்டவணையிற்கண்ட எருக்களில் டன் ஒன்று க்கு நிலத்தைக் கொழுக்கச்செய்யும் சத்தும், அதன்விலையும் இன்ன வென்பதை இதனடியிற் கண்ட அட்டவணையாற் கண்டுகொள்ள லாம்.

எருவைத்தரும் பிராணிகளின் பெயர்.	எருவிலிருக்கும் ஜலபாகம்.	எருவிலிருக்கும்உப்புச்சத்து.	எருவிலிருக்கும்பாஸ்கரச்சத்து.	மரச்சாம்பற் சத்து.	ஒருடன்னுக்கு விலை.
	100 க்கு	100 க்கு	100 க்கு	100 க்கு	டாலர்
ஆடுகள்	59. 52	0. 768	0. 391	0. 591	3. 30
கன்றுகள்	77. 73	0. 497	0. 172	0. 532	2. 18
பன்றிகள்	74. 13	0. 840	0. 390	0. 320	3. 29
பசுக்கள்	75. 25	0. 426	0. 290	0. 440	2. 02
குதிரைகள்	48. 69	0. 490	0. 260	0. 480	2. 21
கோழிகளின் எரு	56. 00	0. 80 to 2	0. 50 to 2	0. 80to 90	7 07

மேற்கண்ட அட்டவணையால் நன்ருகப் போஷிக்கப்பட்ட கால் நடைகளினுற்கிடைக்கும் எருச்சத்து இத்தன்மைத்தென்பதும்இதில் உப்புச்சத்து மரச்சாம்பற்சத்தைவிட அதிகமாகவும், பாஸ்கர சத் தைவிட இருமடங்கு அதிகமாகவும் இருக்கின்றதென்பதும் நன்கு விளங்கும்.

The Comparative value of Solid and Liquid Parts.

இனி இறுகிய எருவினுடையவும் ஜலரூபமான எருவினுடைய வும் தராதரவிலையைப்பற்றி விசாரிப்பாம்.

கால்நடைகளின் நீர் (மூத்திரம்) முதற்றரமான எரு என்று முன்னமே சொல்லியிருக்கிறோம். அதை நம் நாட்டார் கவனிப்ப தில்லை.

கெட்டியான (மல) எருவிற் பிராணிகள் உண்டஉணவில் ஜீரணமாகாத பொருள்களும் கலந்திருக்கின்றபடியால், அவைகள் பிராணிகளின் தேகதத்துவத்தோடுங் கலக்காமல் இறங்கிவிடுகின்றன. ஆனுல் பிராணிகளின் (மூத்திர) நீர் பிராணிகளுக்குள் ஜீரணமான வஸ்துக்களிலிருந்தும், பூரணமாகக்கலந்தும் கரைந்தபொருளாகவும் இருப்பதனுல், அதன் சத்து மிக விசேஷமானது. அந்த மூத்திர நீரும் பிராணிகளினுடைய வயது, உண்ணும் உணவு உதகத்திற்குத்தக்கபடி அமைந்திருக்கிறது. எவ்வாறெனில்,

பிராணிகளின் மூத்திர நீரை இரசாயன சாஸ்திரப்படி பரீக்ஷித்தறிந்த விவரம்.

மூத்திர நீர்ச் சத்துத் தரும் பிராணிகளின் பெயர்.	மூத்திரத்திலிருக்கும் ஜலபாகம்.	மூத்திரத்திலிருக்கும் உப்பு பாகம்.	மூத்திரத்தியபாஸ்கர பாகம்.	களர்ப் பாகம்.
ஆடுகளின் மூத்திரத்தில்	100-க்கு 86.5	100-க்கு 1. 4	100க்கு 0.050	100கு 2. 0
பன்றிகளின் ஷ	ஷ 97.5	ஷ 0. 3	ஷ 0.125	ஷ 0.2
குதிரைகளின் ஷ	ஷ 89.0	ஷ 1. 0	ஷ ,,	ஷ 1.5
பசுமாடுகளின் ஷ	ஷ 92.0	ஷ 0. 8	ஷ ,,	ஷ 1.4

ஆடுகள் பன்றிகள் தவிர, மற்றப்பிராணிகளின் மூத்திரத்தில் உப்புச்சத்தும், சவுடு மரச்சாம்பற்சத்தும் அதிகமாக இருப்பினும் பாஸ்கரசத்து மிகக் கொஞ்சமாக இருப்பதால் அது பூரணமான எருவன்றென்று சிலர் எண்ணக்கூடும். ஆயினும், ஒரு நிலத்துக்கு வெறும் மூத்திரவெருவைமாத்திரம் உபயோகப்படுத்துவதைவிட அந்த ஆடு பன்றிகளின் கெட்டியான (மல) எருவோடு கலக்கி உபயோகப்படுத்தினுற் பூரணமான எருவாகிவிடும்—எப்படியெனில்,

பிராணிகளின் மலமூத்திர எருக்களின் தராதரத்தைக் காட்டும் அட்டவணை.

பிராணிகளின் பெயர்.	ஜலபாகம்.		உப்புசத்து		பாஸ்கர சத்து.		மரச்சாம்பற் சத்து.	
	கெட்டி எரு	ஜல எரு	கெட்டி எரு	ஜல எரு	கெட்டி எரு	ஜல எரு	கெட்டி எரு	ஜல எரு
	100	க்கு	100	க்கு	100	க்கு	100	க்கு
குதிரைகளில்	76	89. 0	0. 50	1. 20	0. 35	,,	0. 30	1. 5
பசுக்களில்	84	92. 0	0. 30	0. 45	,,	,,	0. 10	1. 4
பன்றிகளில்	80	97. 5	0. 60	0. 30	0. 45	0.125	0.50	0. 2
ஆடுகளில்	58	86. 5	0. 75	1. 40	0. 60	0.050	0. 30	2. 0

இந்த அட்டவணையாற் பன்றிகளுடைய மூத்திரத்தில் 100-க்கு 97—5 ஜலபாகமிருப்பது தோன்றும்; அப்படிக்கிருப்பினும், மூத்திரஎருவானது கெட்டியான எருவைவிடச்சிறந்ததென்பதற்கு அந்த மூத்திரத்திலிருக்கும் ஜலபாகத்தைப் பிரித்துப்பார்த்தால் பிரத்தியக்ஷமாகும்—எப்படி எனில்,

பிராணிகளின் மலஜல எருக்களிலிருக்கும் ஜலபாகத்தை நீக்கிச்சத்துப்பாகத்தைக் காட்டும் அட்டவணை.

பிராணிகளின் பெயர்.	உப்புச்சத்து		பாஸ்கர சத்து.		மரச்சாம்பற் சத்து.	
	கெட்டி எரு.	ஜலம் எரு.	கெட்டி எரு.	நல்ல எரு.	கெட்டி எரு.	ஜலம் எரு.
குதிரைகளில் 100-க்கு	2. 0 8	10. 9	1. 45	,,	1. 25	13. 6
பசுக்களில் ,,	1. 87	10. 0	1. 56	,,	0. 62	17. 5
பன்றிகளில் ,,	3. 0 0	12. 0	2. 25	5. 0 0	2. 50	8. 0
ஆடுகளில் ,,	1. 78	10. 4	1. 42	0. 37	0. 71	14. 9

இந்தக் குறிப்பினுற் கெட்டியான மல எருவைப்பார்க்கிலும் ஜலரூபமான மூத்திர எருவில் நைடிரிஜன் என்னும் உப்புச்சத்து அதிகமிருத்தல் பிரத்தியக்ஷமாகும். இப்படி உப்புச்சத்து அதிகமாக இருப்பதற்குக்காரணம், கால்நடைகளுக்குப்பிண்ணுக்கு, கொட்டை, தவிடு முதலான கொழுக்கும் வஸ்துக்களை உணவாகப்போடுவதனுல் உண்டாகிறதென்று டாக்டர் வாரிங்டன் (Warington) சாஸ்திரியார் பரீக்ஷித்துச் சொல்லியிருக்கிருர்.

அதை விவரமாகக் காட்டும் அட்டவணை.

கால் நடைகளின் பலவித உணவுப் போக்கு.	ஒரு டன்னில் இருக்கும் உப்புச் சத்து.	ஒரு டன்னில் இருக்கும் பாஸ்கர சத்து.	ஒருடன்னில் இருக்கும் மரச்சாம் பல்.	ஒரு டன்னில் இருக்கும் உரஞ் செய்யும் வகை.
பலதானியங்களின் உணவில் (கலப்புணவில்)	4. 53டாலர்	0. 83டாலர்	0. 31 டாலர்	1. 24 டாலர்
ஷை	0. 78 ஷை	0. 14 ஷை	0. 32 ஷை	1. 24 ஷை
கிரிமிசன் கிளவர் (பச்சை)	1. 29 ,,	0. 16 ,,	0. 44 ,,	1. 89 ,,
ஷை காய்ந்த புல்லில்	6. 63 ,,	0. 82 ,,	2. 26 ,,	9. 71 ,,
ஷை சிவப்பு ஷை	5. 70 ,,	0. 54 ,,	1. 31 ,,	7. 55 ,,
இறைவைப் பதார்த்தங்களில்	15. 09 ,,	0. 39 ,,	0. 05 ,,	15. 53 ,,
பருத்திக்கொட்டையில்	20. 85 ,,	3. 66 ,,	1. 65 ,,	26. 16 ,,
எள்ளுப்பிண்ணுக்கில்	16. 08 ,,	2. 28 ,,	0. 99 ,,	19. 36 ,,
மாமிசத்துண்டுகளில்	29. 01 ,,	6. 01 ,,	0. 67 ,,	35. 69 ,,
கோதுமையில்	7. 08 ,,	0. 96 ,,	0. 45 ,,	8. 49 ,,
ஓத்துத் தானியத்தில்	5. 36 ,,	0. 96 ,,	0. 45 ,,	6. 70 ,,
கடந்தைப்பாவில்	1. 74 ,,	0. 26 ,,	1. 08 ,,	2. 11 ,,
திமோதிபுல்லில்	3. 00 ,,	0. 43 ,,	1. 17 ,,	4. 60 ,,
கோதுமைத்தவிட்டில்	7. 56 ,,	3. 40 ,,	1. 34 ,,	12. 30 ,,
கோதுமைப்புல்லில்	0. 81 ,,	0. 30 ,,	1. 02 ,,	2. 18 ,,
டர்னிப்ஸில்	0. 48 ,,	0. 14 ,,	0. 34 ,,	0. 96 ,,

இந்த அட்டவணையால் மாமிசத் துண்டு, பருத்திக்கொட்டை, எள்ளுப் பிண்ணாக்கு, கோதுமைத்தவிடு முதலானவற்றைக் கலக்கி உணவாகக்கொடுப்பதில் நல்ல எருச் சத்துக்கள் உண்டாவது பிரத்தியக்ஷம்.

Influence of the nature and proportion of Litter.

கால்நடைகள் படுப்பதற்குப் போகடும் படுக்கைப்புல் வகைகளின் விவரமும் உபயோகமும்.

அமெரிக்கா நாட்டார் கால்நடைகளின் மலமூத்திராதி எருவைத் தக்கபடி உபயோகிப்பதோடுகூட அவைகள் படுப்பதற்கு அடியிற் போகடும் புல் செத்தை முதலானவற்றிலிருந்தும் எருவை எடுத்து உபயோகிக்கிறார்கள். அந்தப்புல்செத்தைகளிலிருக்கும் எருச்சத்தை டாக்டர் வாரிங்டன் (Dr. Warington) அடியிற்கண்ட குறிப்பிலிருக்கிறபடி பரிசோதித்திருக்கிறார்.

ஒருடன் படுக்கைப்புல்லிலிருக்கும் எருச்சத்து.

படுக்கைப்புல் வகையின் பெயர் விவரம்.	உப்புச்சத்து.	பாஸ்கா சத்து.	மாச்சாம்பற் சத்து.
காய்ந்து மக்கின இலைகளில்	16 இராத்தல்	6 இராத்தல்.	6 இராத்தல்.
வைக்கோலில் புல்லில்	8 முதல் 14	4 முதல் 6	12 முதல் 32
பீட்மாஸ் என்ற பாசியில்	16 ,,	—	—
மரங்களை அறுத்த மரத் தூளில்	4 முதல் 14	6 —	6 —
ஸ்பெண்டுடானில்	10 முதல் 20	—	—
பீட்டில்	20 முதல் 30	—	—

கால் நடைகளின் படுக்கைக்குப் போகடும் புல் இலை செத்தை முதலானவை அக்கால் நடைகள் சுகமாகப் படுத்துக்கொள்வதற்கும், அவற்றின்மேல் சாணம் முதலானவை படாமல் சுத்தியாக

வைப்பதற்கும், அவற்றின் மலமூத்திராதிகளை கிரஹித்துக்கொள் வதன்றியும், நல்ல எருவும் ஆகிற விவரம் மேற்கண்ட குறிப்பினுல் தெளியலாகும். இந்தப் படுக்கைப்புல் முதலியவற்றுக்கு ஈரத்தை இழுக்கும் சத்தி அதிகமுண்டு. எப்படி எனில்.

படுக்கைப்புல் ஈரத்தை இழுக்கும் சக்தியைக் காட்டும் அட்டவணை.

படுக்கைப்புல் வகை.	24 மணி நேரத்துள் 100 இராத்தற்புல் ஜலபாகத்தை பாதுகாக்கும் விதம்.	பலவகைப்பொருளில் இருக்கும் அமோனியாவைக்காத்தல்.
கோதுமை வைக்கோல்களில்	220 இராத்தல்	0. 170
காய்ந்து மக்கின இலைகளில்	162 ,,	—
மரத்தூளில்	435 ,,	0. 046
காய்ந்த மண்ணில்	50 ,,	0. 660

இந்தக் குறிப்பினுல் கால்நடைகளின் மலமூத்திரங்களிலிருக்கும் சத்தை படுக்கைப்புல் வகைகள் இழுத்து நல்ல எருவாக்கித் தருவது பிரத்தியக்ஷம். எந்தவித எருவுக்கும் இரண்டு விதங்களில் உண்டாகும் சேதத்தினுல் சத்துப்பொருள்கள் போய்விடுகின்றன. அதாவது எருவைத்தக்கபடி ஈரமாக்கி, மூடிப்பாதுகாக்காவிட்டால் அதிலுள்ள அமோனியா, உப்புச்சத்து ஆவியாகப் பறந்துபோய் விடுவதுமன்றி, அடிப்பாகத்திலும் ஊறி நஷ்டமாகிவிடுகின்றது. இதைப்பற்றியே டாக்டர் வோல்கர் (Dr. Voelcker) சாஸ்திரியார் நைடிரஜன் என்னும் உப்புச்சத்துள்ள எருவைத் தக்கபடி பாதுகாவாததனுல், அதன் எடைச்சத்துக்கள் குறைந்துபோவதைப் பரீக்ஷித்துக்காட்டியிருக்கிறுர். அதாவது 66. 2 நிறை ஈரப்பசையுள்ள 1000, இராத்தல் கலப்புஎருவை எடுத்து அதை மூன்று பிரிவுகளாக வகுத்தும், அவைகளில் முதற்பிரிவை பகிரங்கமான காற்று வீசும்படியானவிடத்தில் குவியலாகப் போட்டும், இரண்டாவது பிரிவைக் காற்றுப்படாத மறைவுள்ளவிடத்திலும், மூன்றுவது பிரி

வை அதன்மேல் மெல்லிதான மறைவைஇட்டு ஒரு குவியலாகப் போட்டும் பார்த்ததில் அந்த எருக்களின்பளுவும் தராதரமும் அவைகளில் இருந்த உப்புச்சத்துக்களும் காலத்துக்காலமு மாறியதை அடியிற்கண்ட குறிப்பைக்கொண்டு தெளிந்துகொள்க.

எருவின் விவரம்.	மறைவிலிருந்த எரு.		காற்றுப்பட வைத்த எரு.		இலகுவான மூடிகையோடுகாற்றுப்படவிட்டஎரு.	
	கனம்.	உப்புச் சத்து.	கனம்.	உப்புச் சத்து.	கனம்.	உப்புச் சத்து.
	இராத்	தல்.	இராத்	தல்.	இராத்	தல்.
பரிசோதனைக்கு முன்னிருந்த எரு	1000	6. 43	1000	6. 43	1000	6. 43
ஆறுமாதங்கள் கழிந்த பிறகு	495	5. 91	714	6. 39	865	4. 66
ஒன்பது மாதங்கழிந்த பிறகு]	398	5. 02	703	4. 19	612	2. 47
12மாதங்கள் கழிந்தபிறகு	379	5. 77	700	4. 55	575	2. 27
12 மாதங்கள் கழிந்த பிறகு இருந்த ஈரம்	41	. 6	74	. 3	65	. 6

இந்தக் குறிப்பிற்கண்ட கணக்கின்படி ஒருவருஷத்தில் மறைவில் வைத்து மூடியிருந்த எருவில் 100-க்கு 14பாகம் உப்புச்சத்தும், காற்றுப்படவிட்டிருந்த எருவில் 100-க்கு 30 பாக உப்புச்சத்தும் இலகுவாக மூடியிருந்த எருவில் 100-க்கு 64 பாக உப்புச்சத்தும் நஷ்டமடைந்ததைக்காணலாம். இதனால் எருவைத்தக்கபடி ஈரமாக்கிமூடிவைத்துப் பாதுகாவாவிட்டால் உண்டாகும் நஷ்டம் இன்னதென்று ஸ்பஷ்டமாகும்.

ஆட்டு எருவில் ஜலபாகம் மிகவும் கொஞ்சம். அதுமகா உஷ்ணகாரியானபடியால் உஷ்ணகாரிசெய்கைகளினால் சீக்கிரத்தில் புளித்து மக்கிக்கெட்டுப்போக, அதிலுள்ள அருமையானஅமிலம் வெளி

ப்பட்டுவிடும். குதிரையின் லத்திஎருவும் ஆட்டு எருவைப்போல வே மிகச்சிறிதான ஜலபாகத்தைக்கொண்ட உஷ்ணமான எரு. ஆட்டு எருவைப்போலவே வெகுசீக்கிரத்தில் புளித்து மக்கி அதிலுள்ள அருமையான அமிலம் வெளிப்பட்டுவிடும். ஆகையால் ஆட்டு எருவைப்போலவே அந்தக்குதிரையின் எருவையும் வெகு ஜாக்கிருதையாக மூடிப் பாதுகாக்கவேண்டும்.

பன்றியின் எருபலதரமானது. இத்தேசத்துப்பன்றிகளே பெரு ம்பாலும் மனிதர் மலத்தை உண்ணவிடுகிறார்கள்; ஆகவே, அவை கள் அசங்கியமுள்ள பிராணிகளாகிவிடுகின்றன. ஐரோப்பா அமெ ரிக்கா நாட்டார் பன்றிக்குத் தானியம் தவிடு மொச்சை கிழங்கு முத லானவற்றைக் கொடுத்து வளர்ப்பதால், நல்ல லாபமடைகிறார்கள். இதன் எருவில் ஜலபாகம் அதிகம். பசுமாடுகளின் எருவிலும் ஜல பாகம் அதிகம்; ஆகவே சாவதானமாக மக்கி கொஞ்சமாக உஷ்ணத் தைத்தருகின்றது. கோழிமுதலான பக்ஷிகளுக்கு மூத்திரமில்லாமை யால் அவற்றின்புழுக்கைகள் அதிக அமிலசத்தைக் கொண்டிருக் கின்றன. ஆயினும் அதைத்தக்கபடி மற்றஈரம்வாங்கிஎருக்களோடு கலக்கி காக்காவிட்டால் அதன் அருமையான அமிலம் ஆகாயத்திற் பறந்துபோம்.

Methods of Applying Manure.

எருவை உபயோகிக்கும் விதம்.

அமெரிகா நாட்டார் எருவை நிலத்துக்கு மூன்று விதங்களாக உபயோகித்துவருகிறார்கள். அவைகளில் முதலாவது (1) எருக்களை வாரிக்கொண்டுபோய்த் தம் நிலங்களில் ஆங்காங்குக் குவியல் குவி யலாகக் கொட்டிவைத்து சிறிதுகாலமானபிறகு கைகளால் எடுத்து நிலத்திற்றூவிவிடுதல். (2-வது) சிலர் எருவைக்கொண்டுபோய் நிலத்திற் பரக்கத்தூவிவிட்டு உடனே உழுது மண்ணோடு கலக்கிவிடு தல். (3-வது) சிலர் தானியங்கள் விதைக்கும்போது கூடவே உழவுச்சாலில் தூவிவிடுதல்; ஆகிய மூன்றுவித அனுஷ்டானங்களு ண்டு.

எகூ சென்றார் வருதல் செறிதொடி சேய்த்தன்று
னின்றார்சொற் றேறுதாய் நீடின்றி—வென்று
ரெடுத்த கொடியி னிலங்கருவி தோன்றுங்
கடுத்த மலைநாடு காண்.

எ-து பருவங்காட்டித் தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

இ-ள். நம்மைப் பிரிந்துபோயினார் வருதல் செறிதொடி! சேய்த்தன்றால், நின்மாட்டு நின்றொழுகுகின்றாருடைய சொற்களைத் தெரியாதாய் போரின்கண் வென்றெடுத்த கொடிகள் போல தெளிந்திலங்கருவி தோன்றுநின்றது மிக்க மலைநாடாதலால் நீடின்றி யின்றே யிரவின்கட் காண்பாயாக **எ-று.** (கஎ)

அ0 உருவவேற் கண்ணா யொருகாற்றேர்ச் செல்வன்
வெருவிவீங் துக்கநீ ளத்தம்—வருவர்
சிறந்து பொருடருவான் சேட்சென்றா ரின்றே
யிறந்துகண் ணாடு மிடம்.

இதுவுமது.

இ-ள். அஞ்சத் தக்க வேல்போன்ற கண்களையுடையாய்! ஒருகாலையுடைய தேர்ச்செல்வனார் பிறர் கண்டார் வெருவும் வகை வீந்தவிந்த கானந் தானே முயற்சியாற் சிறந்து பொருடருவான்வேண்டிச் சென்றவர் இன்றே வருவர்; மிக்குக் கண் இடமாடா நின்றது; **எ-று.** (கஅ)

அக கொன்றாய் குருந்தே கொடிமுல்லாய் வாடினீர்
நின்றே னறிந்தே னெடுங்கண்ணாள்—சென்றாளுக்
கென்னுரைத்தீர்க் கென்னுரைத்தாட் கென்னுரைத்தீர்க்
மின்னிரைத்த பூண்மிளிர விட்டு. [கென்னுரைத்தாண்

எ-து. தலைமகள் இற்செறிப்புக் கண்டபின்னை அவள் நீங்கிய புனங்கண்டு ஆற்றனாய் மீள்கின்ற தலைமகன் சொல்லியது. சுரத்திடைச்சென்ற செவிலித்தாய் சொல்லியதூஉமாம்.

இ-ள். கொன்றாய்குருந்தே: கொடிமுல்லாய் நீர்வாடிநின்றீர்: இதற்கு காரணம் யானறிந்தேன்: நெடுங்கண்ணாளிங்கு நின்று போகின்றாட்கு நீரென்னுரைத்தீர்? நுமக்கு அவளென்னுரைத்தாள்? அவட்கு நீர் பின்னை என்னுரைத்தீர்? அவள் உமக்குப் பின்னை என்னுரைத்தாள், மின்னிரைத்த பூண்விட்டு மிளிராநின்று? **எ-று.** (கக)

அஉ ஆண்கட னுமாற்றை யாயுங்கா லாடவர்க்குப்
பூண்கடனுப் போற்றிப் புரிந்தமையாற்—பூண்கடனுச்
செய்பொருட்குச் செல்வராற் சின்மொழி நீசிறிது
னைபொருட்கட் செல்லாமை நன்று.

எ-து தலைமகனது செலவுக்குறிப்பறிந்து ஆற்றளாய தலைமகளைத்தோழி உலகினதியற்கை கூறி ஆற்றதுடன்படுத்துவித்தது.

இ-ள். ஆள்வினைக்கடனாகிய நெறியையாராயுங்கால், ஆடவர்க்குப்பூணுங்கடனாகப் பாதுகாத்து நல்லார் சொல்லி மேவினமையாற் றமக்கு அவ்வாள்வினை பூணுங்கடனாகத் தேடும்பொருட்குச் செல்வர் நங்காதலர்: ஆதலாற் சின்மொழியையுடையாய்! நீயதற்கு மனனழியுந் திறத்தின்கட் செல்லாமை நன்று; எ-று. (உ௦)

அரு செல்பவோ சிந்தனையு மாகாதா னெஞ்செரியும்
வெல்பவோ சென்றூர் வினைமுடிய—நல்லா
யிதடி கரையுங்கன் மாபோலத் தோன்றிச்
சிதடி கரையுந் திரிந்து.

எ-து தலைமகன் சேலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் உடன்படாது சோல்லியது.

இ-ள். இப்பெற்றித்தாகிய சுரத்தின்கட் செல்வாருளரே? நினைத்தலு மாகாதால்: நினைத்த நெஞ்சும் எரியும்: மாறிச்சுரத்தின்கட் சென்றூர் சுரத்தை வெல்லவல்லரோ? தாமெடுத்துக்கொண்ட வினைமுடியும்படி; நல்லாய்! காட்டெருமைப்போத்துக்களைப் பிரிந்தபெண்ணெருமைகள் கதறுநிற்கும்: அங்குப் பலவாய்க்கிடந்த கற்களும் மா பறந்தாற்போலத் தோன்றும்: சிள்வீடுகளும் திரிந்து கதறுநிற்கும் ஆதலான்; எ-று. (உக)

அச கள்ளியங் காட்ட கடமா விரிந்தோடத்
தள்ளியுஞ் செல்பவோ தம்முடையார்—கொள்ளும்
பொருளில ராயினும் பொங்கெனப்போந் தெய்யு
மருளின் மறவ ரதர்.

இதுவுமது.

இ-ள். கள்ளியங்காட்டின்கட் கடமாக்கள் இரிந்தோடும்வகை மறந்துஞ் செல்வரோ தம்மறிவையுடையார்: வழிபோம் வம்பலராற் கொள்ளும் பொருளிலராயினும் கதுமெனப் போந்தெய்கின்ற அருளில்லாத மறவர் வாழும் வழியை; எ-று. (உஉ)

அ௫ பொருள்பொரு ளென்றூர்சொற் பொன்போலப் போற்றி
யருள்பொரு ளாகாமை யாக—வருளான்
வளமை கொணரும் வகையினுன் மற்றே
ரிளமை கொணர விசை.

எ-து தலைமகனைத் தோழி செலவழுங்குவித்தது.

இ-ள். பொருள் பொருளாவதென்று சொன்னூர் சொல்லைப் பொன்போல விரும்பித்தெளிதலான், அருளுடைமை பொருளாகாமை ஆவதாயினும் ஆக; பொருளைக்கொணரும் வகைமைபோல நின்னருளினுலேவேறே ரிளமை கொணர்தற்கு எமக்குடன்படுவாயாக; எ-று. (௨௩)

அசு ஒல்வா ருளரே லுரையா யொளியாது
செல்வாரென் றுய்நீ சிறந்தாயே— செல்லா
தசைந்தொழிந்த யானை பசியாலாட் பார்த்து
மிசைந்தொழியு மத்தம் விரைந்து.

எ-து தலைமகள் தோழிக்குச் செலவுடன்படாது சொல்லியது.

இ-ள் ஆற்றுவாருளராயின் அவர்பிரிவின் அவர்கட்குரையாய்தவிராதே நங்காதலர் செல்வாரென்றுய் ஆதலால் நீயெனக்கு மெய்யாகச் சிறந்தாயே யன்றே; போகமாட்டாதே வருந்தியிறந்து வீழ்ந்த யானைகளை அங்குள்ளவர்கள் தம்பசியானே எங்கும் பார்த்துத்தின்றுபோம்அத்தத்தினை விரைந்து; எ-று (௨௪)

அஎ ஒன்றுனு நாமொழிய லாமோ செலவுதான்
பின்றுது பேணும் புகழான்பின்—பின்று
வெலற்கரிதாம் வில்வலான் வேல்விடலை பாங்காச்
செலற்கரிதாச் சேய சுரம்.

எ-து புணர்ந்துடன் போக்கு நயப்பித்த தோழிக்குத் தலைமகள் உடன் பட்டுச் சொல்லியது.

இ-ள் பிறழாத வெலற்கரிதாகிய வில்லினை வல்லனுகிய வேல்விடலை தான் துணையாகச் சுரத்தைச் செலற்கரிதாக யாதானுஞ் சொல்லலாமோ? அப்பேணும் புகழான்பின் சேறல் ஒழுக்கத்திற் பிறழாது காண்; எ-று (௨௫)

அஅ அல்லாத வென்னையுந் தீரமற் றையன்மார்
பொல்லாத தென்பது நீபொருந்தா—யெல்லார்க்கும்
வல்லி யொழியின் வகைமைநீள் வாட்கண்ணுய்
புல்லி யொழிவான் புலந்து.

எ-து புணர்ந்துடன் போவா னெநப்பட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

இ-ள் எம்பெருமானோடு பொருந்தி இங்குநின்றும் ஒழிந்து போதற்கு முன்பு வேறுபட்டு மற்றதன்கண் அல்லாத வென்னை நீயிங்கேயிருந்து நம் ஐயன்மார் பொல்லாதெதென்று கொள்ளும் மனத்தின்கண்ணுள்ள கோளினையுந் திருத்தி நீபொருந்தாய் எல்லார்க்குந் தத்தமனத்தின்கணுள்ள வேறுபாடொழியுமாயின் வல்லிபோன்றிருவாட்கண்ணாய்; எ-று. அல்லதூஉம் உடன்போகின்ற என்னைப் புல்லிக்கொண்டொழிவான் வேண்டி மனத்தின்கட் புலந்து நீங்குதற்கு வல்லையாயொழியின் வகைமையையுடைய நீண்ட வாட்கண்ணாய்! ஆண்மை யல்லாத வுரைகளை என்னைநீக்கி நம்மையன்மார் பொல்லாத தென்னுங் கருத்தினையும் நீக்கி எல்லார்க்கும் பொருந்துவாயாக; என்றுமாம். (உசு)

அசு நண்ணிநீர் சென்மி னமரவ ராபவே
லெண்ணிய வெண்ண மெளிதரோ — வெண்ணிய
வெஞ்சுட ரன்னானை யான்கண்டேன் கண்டாளாந்
தண்சுட ரன்னாளைத் தான்.*

எ-து சுரத்திடைச் சென்ற செவிலிக்குத் தலைமகனையுந் தலைமகளையுங் கண்டமை எதிர்ப்பட்டார் சொல்லி ஆற்றுவித்தது.

இ-ள் பொருந்தி நீர் சென்மின்: அவரும் நமக்குச்சுற்றத்தாராயின் நீர் அவரைச் சென்றெய்த வேண்டுமென்று எண்ணிய எண்ணம் எளிது: நீர் கருதிய வெய்ய பகலோனன்னானை யான்கண்டேன், கண்டாளாம் தண்மதியனையாளை யிவள்தான் எ-று. (உஎ)

கூ0 வேறாக நின்னை வினவுவேன் றெய்வத்தாற்
கூறாயோ கூறுங் குணத்தினாய் - வேறாக

* " மீண்டா ரெனவுவந்தேன் கண்டு நும்மையிம் மேதகவே, பூண்டாரிருவர்முன் போயின ரேபுலி யூரெனைநின், றாண்டா னருவரை யாளியன் னானைக்கண் டேனயலே, தூண்டா விளக்கனை யாயென்னை யோவன்னை சொல்லியதே" என்னுஞ் திருச்சிற்றம்பலக்கோவையினையும் (உசச) ஈண்டைக்கு நோக்கிக் கொள்க.

வெம்மனைக் கேறக் கொணருமோ வெல்வளையைத்
தன்மனைக்கே யுய்க்குமோ தான்*

எ-து †'தன்னு மவனும்' என்பதனுள் 'நன்மை தீமை' என்பதனல் நற்றய் படிமத்தாளை வினயது.

இ-ள். நிமித்தஞ் சொல்வார் பலருள்ளும் நின்னை வேறுகக்கொண்டு வினவாநின்றேன்: உன்னுடைய தெய்வத்தன்மையுடைய கழங்காற் பார்த்துக்கூறுய்; உலகத்தார் கூறும் நற்குணத்தினையுடையனுய் எல்வளையை உடன்கொண்டுபோனவன் என் மனைக்கே மணஞ்செய்வதாகக் கொண்டு வருமோ? அஃதன்றி யாம்வேறுகத் தன் மனைக்கே மணஞ்செய்யக் கொண்டுபோமோதான்; எ-று. (உஅ)

௬௧ கள்ளிசார் காரோமை நாரில்பூ நீண்முருங்கை
நள்ளியவேய் வாழ்பவர் நண்ணுபவோ—புள்ளிப்
பருந்து கழுகொடு வம்பலர்ப் பார்த்தாண்
டிருந்துறங்கி வீயு மிடம்.

எ-து தலைமகன்செலவுடன்படாததலைமக்ள் தோழிக்குச் சொல்லியது.

இ-ள். புள்ளிப் பருந்துகள் கழுகுடனே வழிபோவாரைப்பார்த்து அங்கிருந்துறங்கப்பட்டுக் கள்ளியுஞ் சாருங் காரோமையும் நாரில்பூ நீண்முருங்கையும் வேயும் பொருந்தியமர்ந்து வீயுமிடத்தை உயிர் வாழ்பவர் நண்ணுவரோ; எ-று. (உகூ)

௬௨ செல்பவோ தம்மடைந்தார் சீரழியச் †சிஃடுவன்றிக்
கொல்பபோற் கூப்பிடும் வெங்கதிரோன்—மல்கிப்
பொடிவெந்து பொங்கிமேல் வான்சுடுங் கீழா
லடிவெந்து கண்சுடு மாறு.

---

* 'அருஞ் சுர மிறந்த' என்னும் அகப்பாட்டினுள்ளும் 'ஆகுவ தறியு முதுவாய் வேல, கூறுக மாதோ நின்கழங்கின் றிட்ப, மாறுது வருபனி கழுமுங் கங்குலி, ஞனது துயருமென் கண்ணினிது படீஇய, வெம்மனை முந்துறத் தருமோ, தன்மனை யுய்க்குமோ யாதவன் குறிப்பே' என வருதல் காண்க.

† "தன்னு மவனு மவளுஞ் சுட்டி, மன்னு நிமித்த மொழிப்பொருடெய்வ, நன்மை தீமை யச்சஞ் சார்தலென், றன்ன பிறவு மவற்றொடு தொகைஇ" என்பது தொல்காப்பியம். (அகத். ௩௬)

† 'சிற்றுவன்றி' எனவும் பிரதிபேதம்.

இதுவுமது.

இ-ள். தம்மையடைந்தார் சீர்மையழிய நல்லார் செல்வரோ? சிள் வீடுகள் நெருங்கிக் கடியவோசையாற் பிறரைக் கொல்வனபோலக் கூப்பிடா நிற்கும் வெய்ய வெயிலோன் மிக்குப்பொடிகள் வெந்து பொங்கி மேலே விசும்பினைச் சுடாநிற்கும், கீழின்கண் வழிபோவார் அடி வேவ அவர் கண்களைச் சுடாநிற்கும் இப்பெற்றிப் பட்ட அவ்வழியினை; எ-று. (௫௦)

பாலை முற்றியது.

ச-முல்லை.

---

௬௩ கருங்கடன் மாந்திய வெண்டலைக் கொண்மூ
விருங்கடன்மா கொன்முன்வேன் மின்னிப்—*பெருங்கட
றன்போன் முழங்கித் தளவங் குருந்தணைய
வென்சொல்யா னாற்றும் வகை.

எ-து பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குரைத்தது.

இ-ள். கருங்கடலைப் பருகிய வெண்டலை முகில்கள் இருங்கடலின்கண்ணே புக்கு மாவினைக்கொன்ற முருகன் வேல்போல மின்னிப் பெருங்கடறன்னைப்போல முழங்குதலால் முல்லைக்கொடிகளெல்லாம் குருந்தமரத்தின் மேற் சென்றணையக்கண்டு யான் ஆற்றுந்திறம் என்னைகொல்லோ? எ-று. (க)

௬௪ பகல்பருகிப் பல்கதிர் ஞாயிறுகல் சேர
விகல்கருதித் திங்க ளிருளைப்—பகல்வர
வெண்ணிலாக் காலு மருண்மாலை வேய்த்தோளா
யுண்ணிலா தென்னுவி யூர்ந்து.

இதுவுமது.

இ-ள். பகற்பொழுதைப் பருகிப் பல்கதிர்ஞாயிறு மலையின்கட்சேரத் திங்களானது இருளைப் பகையென்றுகருதிப் பகலின்றன்மைவர வெண்ணிலாவையுகாநின்ற மருண்மாலையின்கண், வேய்த்தோளாய்! என்னிடத்து நிலைகின்றதில்லை, என்னுயிர் சென்று : எ-று. (உ)

---

* 'பொருங்கடல்' பிரதிபேதம்.

௩௫ மேனோக்கி வெங்கதிரோன் மாந்தியநீர் கீழ்நோக்கிக்
கானோக்கங் கொண்டழகாக் காண்மடவாய்—மானோக்கி
போதாரி வண்டெலா நெட்டெழுத்தின் மேற்புரியச்
சாதாரி நின்றறையுஞ் சார்ந்து.

எ-து தோழி தலைமகளைப் பருவங்காட்டி வற்புறுத்தியது.

இ-ள். வெங்கதிரோன் மேனோக்கிப் பருகியநீர் கீழ்நோக்குதலால் காடெல்லாம் ஒக்கங்கொண்டழகாகப் போதுதோறும் அரிவண்டுகள் நெட்டெழுத்தோசைமேல் மேவிச் சாதாரியென்னும்பண்ணினைச் சார்ந்தொலியாநின்றன ; மானோக்கி இதனைக் காணாய்; **எ-று.**

அல்லதூஉம் 'போதாரி வண்டெலாம்' என்பது போதினைப்பரந்து இவ்வண்டெல்லாம் என்றவாறு. (௩)

௩௬ இருள்பரந் தாழியான் றன்னிறம்போற் றம்மு
னருள்பரந்த வாய்நிறம் போன்று—மருள்பரந்த
பால்போலும் வெண்ணிலவும் பையர வல்குலாய்
வேல்போலும் வீழ்துணையி லார்க்கு.

எ-து மாலைப்பொழுது கண்டு ஆற்றளாய தலைமகள் தோழிக்குச்சொல்லியது.

இ-ள். சக்கரத்தையுடைய மாயவனிறம்போல எங்குமிருள் பரந்து, அம்மாயவன் முன்னோனுடைய நிறம்போன்று வியப்புமிக்க பானிறமும் போன்ற வெண்ணிலாவும், பையரவல்குலாய்! இவைவிரும்பப்படுந்துணையில்லாதார்க்கு வேல்போலும்; **எ-று.** (௪)

௩௭ பாழிபோன் மாயவன்றன் பற்றார் களிற்றெறிந்த
வாழிபோல் ஞாயிறு கல்சேரத்—தோழியோ
மான்மாலை தம்மு னிறம்போன் மதிமுளைப்ப
யான்மாலை யாற்றே னினைந்து.

இதுவுமது.

இ-ள். தனக்கு வலிபோலக் கருதி மாயோன் பற்றார்களிற்றின் முகத தெறிந்த சக்கரம்போல ஞாயிறு குடமலையைச் சேரத் தோழி! மருண்மாலையின்கண் அம்மாயவன்முன்னோன் நிறம்போல மதி தோன்றுதலான் யான் கொண்ட மயலை ஆற்றமாட்டுகில்லேன் வருந்தி; **எ-று.** (௫)

௯௮ வீயும் வியப்புறவின் வீழ்துளியான் மாக்கடுக்கை
நீயும் பிறரொடுங்கா ணீடாதே—யாயுங்
கழலாகிப் பொன்வட்டாய்க் காராய் மடலாய்க்
குழலாகிக் கோல்சுரியாங் கூர்ந்து.

எ-து பருவமன்றென்று வற்புறுத்தியதோழிக்குத் தலைமகள் வன்புறையெதிரழிந்து சொல்லியது.

இ-ள். ஆயப்படுங் கழல்போல அரும்பிப் பொன்வட்டுப் போல முதிர்ந்து பின்னைப் பூமாலையாய்இதழாய் விரிந்து மடவார்குழல்போலக் காய்த்து பின்னைத் துளையையுடைய கோலாய் மிக்கு அழியாநின்றன, வியன்புறவின் கண்ணே வீழ்துளியானே பெருங்கொன்றைகள்: இதனைப் பிறரோடே நீ போய் நீயுங்காணாய் நீடியாதே; எ-று. (௬)

௯௯ பொன்வாளாற் காடில் கருவரை போர்த்தாலு
மென்வாளா வென்றி யிலங்கெயிற்று—யென்வாள்போல்
வாளிழந்த கண்டோள் வனப்பிழந்த மெல்விரலு
நாளிழந்த வெண்மிக்கு நைந்து.

இதுவுமது.

இ-ள். பொன்போன்ற வெயிலொளியால் வெந்து காடின்றியிருந்த கருவரைகள் கார்ப்பருவஞ்செய்து மலரிதழ்களான் மூடப்பட்டாலும் அதனாற் பயனென்? பருவமன்றென்று சொல்லி வாளாநின்றி; இலங்கெயிற்றையுடையாய்! என் மேனியின் கண்ணுள்ள ஒளிபோல ஒளி யிழந்தன என் கண்களும்: போயிழந்த நாள்களினெண் மிகுதலான் எண்ணி என் விரல்களுந் தேய என்றோள்களும் வனப்பிழந்தன; எ-று.

இதனுள் வாளா என்பது பயனின்மையைக் காட்டுவதோர் இடைச்சொல். (௭)

௧௦௦ பண்டியையச் சொல்லிய சொற்பழுதான் மாக்கடல்
கண்டியைய மாந்திக்கால் வீழ்த்திருண்—டெண்டிசையுங்
கார்தோன்றக் காதலர் தேர்தோன்றா தாகவே
பீர்தோன்றி நீர்தோன்றுங் கண்.

எ-து. பருவங்கண்டழிந்த கிழத்தி தோழிக்குச் சொல்லியது.

இ-ள். தாமுன்பு நம்மைப் பிரிகின்றநாட் குறிப்படச்சொல்லிய சொற்பழுதாயிற்றால்: பெருங்கடற்சென்று கண்டு நிரம்பப்பருகிக் கால்வீழ்த்தேயிருண்டு திசையெட்டுமெழைதோன்றக் காதலர் தேர் தோன்றுகின்றதில்லை. ஆதலால் என் கண்கள் பீர்தோன்ற நீர்தேன்று நின்றன; எ-று. (௮)

உ

திருச்சிற்றம்பலம்.

அட்டாங்க யோகக்குறள்.

பாயிரம்.

வெண்கோட்டன் செய்யன் கரிமுகனுள் வீற்றிருந்தென்
*னெண்கோட்டந் தீர்த்தளிப்பா னின்பு. (௧)

உலகம் படைப்பித் தளிப்பித் தொழிப்பித்
திலகுமுயி ருள்ளெம் மிறை. (௨)

†ஐந்தொழிற்கு ‡மைந்துவித முற்றமல னோடமரும்
பைந்தொடிபொற் பாதநினைப் பாம். (௩)

இவர்புதல்வர் தாள்கணத்துக் கீசர் முனிவ
ரவர்பதமுஞ் சென்னியில்வைப் பாம். (௪)

செந்தமிழ்வே தாகம மாதி தெருட்டினர்தாள்
வந்தனை செய்வா மகிழ்ந்து. (௫)

ஆய்ந்தா கமத்தறைவா மட்டாங்க யோகமதை
யாய்ந்தார்தீர்ப் பாரிந்நூற் காசு. (௬)

நூல்.

இமய நியமமிணங் காதனமா §யாம
மயர்வில் பிரத்தியாகா ரம். (௧)

தாரணை யோடு தியானஞ் சமாதியுமென்
றோரிருநான் கங்கமும்யோ குள். (௨)

---

*எண் கோட்டம்—மனக்கோட்டம்.

†ஐந்தொழில்—பஞ்சகிருத்தியம்.

‡ஐந்துவிதம்—ஐந்துவித சததி.

§ஆயாமம்—பிராணாயாமம்.

க. இயமம்.

*அயிங்கிதைமெய் யாதி யியம மவற்றை
யியம்புவங் கேளா யினி. (௩)

பிழைநூறு செய்தார்க்கும் †பீழையினைச் செய்யா
வழகே யயிங்கிதை யாம். (௪)

பொருளறச் ‡சொல்லுஞ்சொற் பொய்யாச்சொல் லாதே
பொருளுறச் சொல்க $புரிந்து. (௫)

தேசிகர்க்குந் தேவர்க்கு மாக்கமுறச் செப்பும்பொய்
வாசகமு மெய்யெனுமெய் வாக்கு. (௬)

தனக்கு மிடியுறினுந் தக்காரல் லார்கைத்
தனத்தினைத் தாங்காமை சால்பு. (௭)

உண்பானு முண்ணு துடல்வெறுப்பா னுமிகழ்சோ
றுண்பா னலனே லுவந்து. (௮)

பெண்ணாசை மண்ணாசை யற்றும் பெரியனல
னெண்ணுதுண் பானிழிந்தா ரில். (௯)

தனக்கருக மில்லா வனைத்துந் தணப்பான்
வனத்துமுனி யேமனைவாழ்ந் தும். (௧௦)

ஏந்திழையார் தன்சயன மெய்தித்தன் மெய்தொடினுங்
காய்ந் §துவர்த்த லேவிரத்தி காண். (௧௧)

இல்வாழ்வா னுந்துறவி தன்னேந் திழைதன்னை
யல்லார்பா ¶லாதரவற் றுல். (௧௨)

---

* அயிங்கிதை—பிறவுயிர்க்கு இமிசை செய்யாமை.

†பீழை—துன்பம்.

‡சொல்லுஞ்சொல்—பொருளறப்பொய்யாச்சொல்லாது எனக்கூட்டுக.

$புரிதல்—விரும்புதல்.

§உவர்த்தல்—வெறுத்தல்.

¶ஆதரவு—விருப்பம்.

தணந்திடுக தன்மனைவி தோளினையுந் தான்று
*னிணங்கவொண்ணா நாள்களெண்ணி யே. (கங)

மனத்தூய்மை யென்றார் வயிர மறுகை
தனைப்பிழைத்தார் தம்பா லுந் தான். (கச)

இயமமிவை யெல்லா மினிப்பொறை யாதி
நியமமுஞ்சொல் வாங்கேளாய் நீ. (கரு)

உ. நியமம்.

அறுத்திடுக கோப மறிவிலர்பாற் றம்மை
யொறுத்திடுவார் தம்பாலி னும். (கசு)

மண்ணாலு நீரா லு மாற்றியுடன் மாசதன்பின்
றெண்ணீராற் றர்ப்பணமுஞ் செய். (கஎ)

தேசிகர்க்கு மாதவர்க்கு மேவலினைச் செய்கசிவ
பூசனையுஞ் செய்க புரிந்து. (கஅ)

†ஆக்கத்தி னுற்ற வகமகிழ்ச்சி செய்திடுக
வாக்க மழியினுநோ வற்று. (ககூ)

ஈர்ந்திடினுந் தன்னை யெதிர்மகிழ்ந்தே யெம்பாவந்
தீர்ந்ததெனக் காண்க தெளிந்து. (உ0)

நியமமிவை யெல்லா மினிநிகழ்த்து வாங்கே
ளயர்வுளறுத் தேயா தனம். (உக)

ங. ஆதனம்.

அச்சமிலா வெல்லை யகந்தானு மாதனத்துக்
‡கெச்சமிலா நல்லிடமென் றெண். (உஉ)

*இணங்க வொண்ணா நாள்கள்:—"பூத்துநீ ராடியநாண் முதலாகப் பன்னிருநாள் பூவை மார்க்கு, வாய்த்தசூ லுறுங்கால மாதலினா லந்நாளுண் மகமே மூலம், பாத்தசீர் விரததினந் தனக்காகா நாள்பஞ்ச பருவமெல்லா, நீத்துநூல் விதித்ததினம் புணரானேற் கருவொன்று நீக்கி னானால்" எனத் திருவானைக்காப் புராணத்தினும், "பூவையே யனையார் தம்மிற் பூத்தநாண் முதனா னான்கு, மேவிடார் புணர்ச்சி பின்னை விரும்புநாள் பன்னி ரண்டி, லேவுறு கருப்ப முண்டா மிங்கிதி லிரட்டி நாளாண், பாவின தொற்றை நாளேற் பெண்ணெனப் பகரு நீயே" என உள்ளமுடையானிலுங் கூறின மை காண்க.

†ஆக்கம்—செல்வம்.

‡எச்சம்—குறை.

ஆதனந்தா னேபதும மாதியவற் றுட்பதும
வாதனஞ்சொல் வாமேகே ளாய். (உ௩)

வலக்காற் புறமிடக்கா லுள்ளுறக் *கவான்வை
வலக்கைப் புறமிடத்து வை. (உச)

பதுமா தனமதுதான் †மற்றையவும் பாட்டுள்
விதியறிந்து செய்க விழைந்து. (உரு)

அன்றித்தன் னாகத் ‡தினுக்கிசைந்த வாதனத்து
ளொன்றிப் புரியலுமா கும். (உசா)

வரிப்புலித்தோ $லிற்கரிய மானி னதளி
னிருக்கையது வாமென்றே யெண். (உஎ)

இயற்றுய் வடதிசையை நோக்கி யிருந்தே
யியற்றலுமாம் §பூருவதிக் கின். (உஅ)

உரைத்தாமெய் யாதனந் தன்னை யினியா
முரைப்பாமா யாமாதி யும். (உகூ)

ச. பிராணயாமம். (பிராணவாயுவொடுக்கம்)

¶புகவுள் ளுயிரிடையிற் பூரித்துக் கும்பித்
துகவலத்தி னலே யொழி. (௩0)

---

*கவான்—தொடை.

†மற்றைய—பத்திராசனம், சிங்காதனமுதலியன.

‡ஆகம்—தேகம்.

$அதள்—தோல்.

§பூர்வதிக்கு—கீழ்த்திசை.

¶இக்குறளின் பதவுரை—உயிர்-பிராணவாயுவை, இடையில்-இடைகலை யாகிய இடமூக்கினிற்கும் நாம்பின்வழியால், உள்புக-உந்தியினுள்ளேசெல்ல பூரித்து-பூரகஞ்செய்து, (பூரகஞ்செய்தல் பிராணவாயுவை யுள்ளேவாங்குதல்) கும்பித்து - சுழுமுனைநாடியாகிய நடுநாடியிற் செலுத்தியடக்கி, வலத்தினல் - பிங்கலையாகிய வலமூக்கினிற்கு நாடியால், உகஒழி - நீங்கவிடுவாயாக என்றவாறு. "பிராணவாயுவின் குணமாவது இடைகலை பிங்கலை சுழுமுனை யென்னுமூன்று நாடிகளில் நடுநின்ற சுழுமுனையொழிய இரண்டின் வழியே மூலாதாரத்தினின்று மேனேக்கியேறி இரண்டுமூக்கானும் ஓரோர் பாரிசத்

*புடைவலத்தாற் பூரித்துக் கும்பித்துப் போக்கா
யிடையாலிவ் வாறியற்றென் றும். (௩௧)

†எண்ணிரண்டு பூரிக்க வெட்டெட்டுக் கும்பிக்க
வெண்ணான் கிரேசிக்க வே. (௩௨)

‡எழுத்துக் கியம்பிய மாத்திரைகொ ளீது
மொழித்தியம்பு மாத்திரையு முண்டு. (௩௩)

சகற்ப மகற்பமெனத் தானிரண்டா யாமஞ்
சகற்ப மதிகபலந் தான். (௩௪)

சகற்பந் தியானசெபந் தன்னோ டியற்ற
லகற்பமிவை யன்றியியற் றல். (௩௫)

ஐந்தெழுத்துஞ் சூத்திரரல் லார்மூவ $ரோங்கார
மந்திரத்துச் செய்க வழக்கு. (௩௬)

§இயற்றலுமாங் கும்பகமும் ரேசகமு மின்றி
யியற்றுதீங் கெல்லா மிறும். (௩௭)

துக்கு ஐந்துநாழிகையாகக்கொண்டு ஒருமாத்திரையில் கஉ௫ சுவாசமாய் ஒருசுவாசத்திலே கஉ அங்குலி வாயுப்புறப்பட்டு நாலங்குலி தேய்ந்து எண் விரல் உள்ளே அடங்குகின்றது'' எனவும், "ஒருமாத்திரையாவது இரண்டரை நாழிகையை எட்டுக்கூறிட்டு ஒருகூறென்றறிக'' எனவும், "மூலாதாரமாவது சரீரத்தளவு தன்கையாற் றொண்ணூற்றாறங்குலம்; இதன்மேலே நாற்பத்தேழரையங்குலமுங் கீழேநாற்பத்தேழரையங்குலமும் விட்டு நடுநின்ற ஓரங்குலம்'' எனவும் சிலப்பதிகாரவுரையிற் கூறப்பட்டது.

* இக்குறளால் முன்னர்க்கூறியதனைமாற்றிப் பிங்கலையாற்பூரகமும் சுழுமுனையாற் கும்பகமும் இடைகலையால் ரேசகமும் செய்யவேண்டுமென்றுரைக்க.

†இக்குறளிற் சொல்லப்பட்ட எண்கள் மாத்திரையைக்குறிக்கின்றன.

‡எழுத்துக்கியம்பிய மாத்திரையாவது கண்ணிமைப்பொழுதுங் கைந்நொடிப்பொழுதுமாம்.

$ஓங்காரத்தோடு என உருபு விரித்துரைக்க.

§'கும்பகமும் ரேசகமும் இன்றி' என்றதனால் இயற்றலுமாம் என்பதற்குப் பூரகமாத்திரஞ்செய்தலுமாகும் எனப்பொருள்கொள்க.

¶திரண்டபால் கைப்புத்தித் திப்புப் புளிப்பு
முருண்ட||சுரை யாதியுநீத் துண். (௩௮)

அருந்திய வன்னத் தளவுறும் பாவ
மருந்துவித்தான் பாவ மறும். (௩௯)

ஆதலினு லற்ப மருந்திடுக வாவியுறச்
சாதிக்க யோகந் தனை. (௪௦)

*உதரபந்தம் வீக்கிடையி லுண்டவன முண்ட
†வுதகஞ் சிறுகூ டுற. (௪௧)

௫. பிரத்தியாகாரம்.

பிரத்தியா காரமினிக் கேள்பிரித்தோ ‡ரைந்தும்
விருப்பத்தின் $மீட்க விரைந்து. (௪௨)

௬. தாரணை.

§மனந்தன்னை யிந்திரியந் தன்னை மடக்கி
யனந்தனடி வைதா ரணை. (௪௩)

௭. தியானம்.

ஏற்றதியா னஞ்சிதம்பரேச னடிநினைவு
¶மாற்றவே நிற்கும் ||வரம். (௪௪)

ஒண்டொடியைக் காமுகன்று னுன்னுதல்போ லுள்ளத்துக்
கண்டிருகங் காளன் கழல். (௪௫)

¶திரண்டபால் - வற்றக்காய்ச்சித் திரட்டிய பாலென்க.

||சுரை - சுரைக்காய்.

*வஸ்திரமுதலானவற்றால் வயிற்றைச்சுற்றியிறுக்குங்கட்டு.

†உதகம் - நீர்.

‡ஐந்து - பஞ்சேந்திரியம்.

$மீட்க எனவே உண்ணேக்குக என்பது கருத்தாயிற்று.

§மனந்தன்னை அனந்தனடிவை எனக்கூட்டுக; அனந்தன் -சிவபிரான்.

¶ஏனையவற்றிலே நினைவு மாற்ற எனவருவித்துரைக்க; நினைவு-மத்திமதீபம்.

||வரம் - மேன்மை.

அரிது சமாதி யடைகை யதனு
லெளிது தியான மியற்று. (சசு)

எளிதுதியா னப்பலமென் றெண்ணித் தியானம்
*வெளிற விருப்பர் விரைந்து. (சஎ)

பரிய வுடைகளவர் பட்டாடை பெற்றுர்
பரியவுடை †யில்லார்க்குப் பட்டு. (சஅ)

ஆதார மென்னநிரா தாரமென்ன ‡யோகமிரண்
டாதாரஞ் சொன்னதியா னம். (சகூ)

பரமசிவன் ருளுயிருட் பார்க்கைநிரா தார
மிரவுபக லற்றவிடத் தின். (ரு0)

அ. சமாதி.

இந்தநிலை தானே சமாதியித னைப்பெற்றுர்க்
$ைகைந்தொடுநான் கும்மடங்கு மாங்கு. (ருக)

அட்டாங்க யோக சமாதி யடைந்தாருக்
கட்டமா சித்திகளுண் டால். (ருஉ)

ஆதலினுற் செக்க ருக்கரொரு கோடியென
நாதனைநீ நெற்றிநடு நாடு. (ருங)

நெஞ்சந் தனினு நினைநினக்கு வேண்டுமுரு
§வஞ்சஞ் செனுஞ்சகளத் தாய்ந்து. (ருச)

அருச்சனைசெ யன்பா லிதைய வலரிற்
றரித்துச் சதாசிவனைத் தான். (ருரு)

---

*வெளிற - இலேசாக என்பது கருத்து.

†இல்லார் - தரித்திரர். இல்லார்க்குப் பரியவுடையேபட்டு என்பது கருத்து.

‡யோகம் - தியானம்.

$ஐந்து - பஞ்சேந்திரியம்; நான்கு - அந்தக்கரணம் நான்கு.

§அஞ்சஞ்செனுஞ் சகளம் - சிவபிரான்கொண்ட சகளவடிவமென்னு மிருபத்தைந்து மூர்த்தம்.

நின்று மிருந்துங் கிடந்து நடந்துநினை
யென்றுஞ் சிவன்றா ளிணை. (டுசு)

முத்திசமா திக்காகு மற்றையவே மும்முறையாற்
*புத்திவிதம் வாய்க்கும் பொருள். (டுஎ)

அடங்கினர்க்கிவ் வட்டாங்க மாரியன்போ திக்க
விடம்பர்க் குணர்த்தின் விழும். (டுஅ)

தீர்வா†ரா சுத்தமர்க்குத் தேற்றினர்தேர்ந் தாருமிந்நூல்
சேர்வார் பரம சிவம். (டுகூ)

அட்டாங்கயோகக்குறண்முற்றிற்று.

☞ இந்நூல் திருக்கைலாயபரம்பரைத்திருவாவடுதுறை ஆதீனத்திற் கிடைத்தது. இந்நூலாசிரியர் பெயர் முதலியன விளங்கவில்லை. இங்கே இவ்வட்டாங்கயோகக்குறளை "ஆய்ந்தாகமத்தறைவாம்" என முன்னர்க்கூறியிருத்தலால், இது சைவசமயத்தவர்க்கு ஞானசாதனமாய் மிக்கபயன்றருவதெனக் கருதி இச் 'செந்தமிழ்' வாயிலாக வெளியிடுவித்தேன்.

இங்ஙனம்,
திருவாவடுதுறை ஆதீன வித்வான்
சேற்றூர்-சுப்பிரமணியக்கவிராயர்,
சைவநூற் பரிசோதகர்
மதுரைத் தமிழ்ச்சங்கம்
மதுரை.

---

*புத்தி - போகம்.

†ஆசு - குற்றம்.

உ

திருச்சிற்றம்பலம்.

வருத்தமறவுய்யும்வழி.

செம்பவள வாயன் சிவன்சுத னைங்கரன்றா
ணம்பவள மாமே நமக்கு. (க)

கருத்தினிற்கண் டீசனடி கட்டுரைப்பாம் பத்தர்
வருத்தமற வுய்யும் வழி. (உ)

விருத்தர் பிணியாளர் மெல்லியலார் பாலர்
கருத்தினருச் சிக்கவே கண்டு. (ங)

உதையத் திரவி யொளியனைய லிங்க
மிதையத் தலர்மீ திருத்து. (ச)

ஆட்டுகவான் பாலாதி பட்டணிந்தா ரக்குழம்புஞ்
சூட்டுகவில் வாதித் தொடை. (ரு)

நிகழுமன்பாற் [1]போனக மாதி நிவேதி
கமழ்தூப தீபாதி காட்டு. (சா)

அஞ்செழுத்தாற் சொன்ன [2]வனைத்தினையுஞ் செய்யடைவே
யஞ்செழுத்தே மந்திரமெல் லாம். (எ)

[3]நெஞ்சத் தருச்சி நினைவுதனி லாகுதிசெ
யஞ்செழுத்தா [4]னுபியழ லார்ந்து. (அ)

பாவனையிற் பட்ட கருடனாற் பாம்பொழியும்
பாவனைமெய் செய்யும் பலம். (கூ)

உள்ளேவல் செய்வானைக் [5]காந்தன் மிகவுவப்ப
னுள்ளேசெய் பூசை யுவந்து. (ம)

---

1 போனகம் - அன்னம்.

2 அனைத்தினையும் - ஆன்பாலாதியனைத்தையும்.

3 நெஞ்சத்தைப் பூசைத்தானமென்றும், 4நாபியையோமத்தானமென்றுஞ் சிவஞான சித்தியாருரையிற் கூறியவாறு காண்க.

5 காந்தன் - நாயகன்.

அலைவாக்கைக் கில்லை யருவருப்பு மில்லை
கொலையுமிலை [1]யுட்பூசை கூட்டு. (௰க)

புறத்துஞ் சிவபூசை பூவாற் புரியா
[2]யறத்தின் மலையிலக்கே யாம். (௰உ)

முட்டாதே தொட்டான் முடிக்க சிவபூசை
விட்டா னரகின் விழும். (௰௩)

நெஞ்சத்துன் னிச்சிவன்று ணீண்ட [3]வடங் கைபூண்டே
யஞ்செழுத்தை நாவினுஞ்சொ லாய்ந்து. (௰ச)

வாக்கினெலி மந்தவொலி மானதமென் றிம்மூன்று
மாக்குங்காற் [4]றர்ச்சனிமுன் னும். (௰ரு)

வாக்கொலியின் மந்தம் [5]விசிட்ட மதன்விசிட்ட
மாக்கு மொலிமனத்தி னால். (௰சா)

மேலியற்றுய் போகம் வெறுத்தால் விரும்பினால்
மாலையைக் கீழே மறி. (௰எ)

கண்டி விசிட்டங் [6]கநிட்டங் [7]குசைக்கிரந்தி
[8]புண்டரிக முன்மணியும் பூண். (௰அ)

சிவஞ்சத்தி யான்மாத் [9]திரோதமல [10]மைந்துஞ்
[11]சிவமுதலைந் திற்சிந்தை செய். (௰கூ)

---

1 உட்பூசை - அந்தர்யாகபூசை.
2 அறத்தின்மலை - என்றது சிவபிரானையென்க.
3 வடம் என்றது உருத்திராக்கமாலையை.
4 தர்ச்சனி - சுட்டுவிரல்.
5 விசிட்டம் - மேன்மை.
6 கநிட்டம் சிறுமை.
7 குசைக்கிரந்தி - தருப்பைமுடிச்சு.
8 புண்டரிகமணி - தாமரைக்கொட்டையாகியமணி.
9 திரோதம் - திரோதானசத்தி.
10 மலம் என்றது ஈண்டு ஆணவ மலமென்க.
11 சிவ - என்றது சிகரவகரங்களை.

முத்தி [1]வல நாடி மொழி [2]சுழுனை முற்றிரண்டிற்
[3]புத்திக் [4]கிடையிற் புகல். (உ0)

[5]நெற்றிநடு மன்று ணிருமலன்ற ளுடன்பாற்
பற்லறுப்பா னுன்பாலன் பால். (உக)

அருக்கன் சிவனென் றலரினு லர்ச்சி
யிருப்பாய் சிவபுரத்து ளின்பு. (உஉ)

தூவியிணைக் கோபுரத்தை யீசனெனக் கண்டுதொழு
பாவமறும் வாயாதுன் பம். (உங)

[6]நின்று மிருந்துங் கிடந்து நடந்துநினை
யென்றுஞ் சிவன்ற ளிணை. (உச)

வறுத்தமற வுய்யும் வழிமொழிக பத்தர்க்
கிரக்கத்தா லாசா ரியன். (உரு)

வருத்தமறவுய்யும்வழிமுற்றிற்று.

☞ இந்நூல், திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற் கிடைத்தது. இந்நூலாசிரியர் பெயரிடங்கால முதலியன விளங்கவில்லை. அட்டாங்கயோகக் குறளிற் கூறிய 'நின்றுமிருந்து' மென்னு முதற்குறிப்புடைய குறளை யீண்டுங் கூறியிருத்தலால் அந்நூலாசிரியரே இந்நூலாசிரியரென்றும் அவர் மாணுக்கரே இந்நூலாசிரியரென்றுங் கூறுவர். இதில், அந்தரியாக பூசை, ஓமம், தியான முதலியவற்றைக் கூறியிருத்தலாற் சைவசித்தாந்திகட்குப் பெரும் பிரயோசனமாயுள்ளதென்று வெளியிடு வித்தேன்.

இங்ஙனம்
சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயர்.

---

1 வலநாடி - பிங்கலைநாடி.
2 சுழுனை - நடுநாடியாகிய சுழுமுனைநாடி.
3 புத்தி - போகம்,
4 இடை இடைகலைநாடி.
5 நெற்றியைத்தியானத் தானமெனச் சிவஞான சித்தியாருரையிற் கூறியவாறு காண்க.
6 இவ்விருபத்து நான்காவது குறளை அட்டாங்க யோகக் குறளிலுங் கூறியவாறு காண்க.

உ

கடவுள் துணை.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில்

விற்கப்பெறும் புத்தகங்கள்

1. ஞானாமிர்தம் மூலமும் உரையும்.

இது ஸ்ரீ கைலாயபரம்பரை நிறைந்த நாயனார் சந்தானத்துப் பரமானந்த முனிவர் அருள்பெற்ற வாகீசமுனிவர் இயற்றியருளியது. மூன்றடிச்சிறுமையும் ஐம்பத்தாறடிப் பெருமையுமுள்ள அகவற்பா எழுபத்தைந்துடையது. வீடுகாதலிக்கும் நல்லறிவினர்க்குச், சிவாகமங்களுட் கூறப்படுவனவாய சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் நான்குபாதங்களுள்ளே ஞானபாதத்துக்குரிய பதிபசுபாசங்களி னியல்பை நியாயவாயிலான் உணர்த்தி வீடெய்தும் உபாயங்கூறுவது. சொல்வளம் பொருள்வளங்களாற் கற்போர்நெஞ்சங் காமுறச்செய்வது. ஸ்ரீ கைலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து மாதவச்சிவஞானயோகிகளாற் சிவஞான போதவுரை முதலியவற்றில் மேற்கோள்காட்டப்பெற்றது. இத்தகைச் சிறப்புவாய்ந்த இந்நூல் இதன் பழைய உரையுடன், திருவாவடுதுறையாதீன வித்துவானும், மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமான சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயரவர்களாற் பலபிரதிகளைக் கொண்டு பரிசோதித்து விசேடக் குறிப்புக்களுடன் அச்சிடப்பெற்று, இப்போது முடிந்துள்ளது. இது சங்கப்பிரசுரங்களுள் முதலாவதாகும். இதன் விலை ரூ 1.

2. சைவமஞ்சரி.

இது மதுரைத்தமிழ்ச்சங்க ஸ்தாபகரும், அக்கிராசனாதிபதியுமான ஸ்ரீமாந் பொ. பாண்டித்துரைத் தேவரவர்களாற் றொகுக்கப் பெற்றது. முன்னர் யாவர்க்கு முபயோகமாகத் தேவரவர்களால் வெளியிடப்பெற்ற ‘பன்னூற்றிரட்டு’ போல, சைவசமயிகட்குப் பெரிதும் பயன்படுமாறு, கடவுள்வாழ்த்து, பதி, பசு, பாச முதலாய அதிகாரவடைவுடன் இப்போது பிரசுரிக்கப்பெற்றது. அறுபத்

தேழு சைவநூல்களினின்று (அஃதாவது 108399 - செய்யுள்களினின்றும்) ஆராய்ந்தெடுக்கப்பெற்ற 1316-செய்யுண்மணிகளுடையது. சமயஞானமுறவிரும்புவோர்க்கும், பிரசங்கிகட்கும், தவறாது கையிலிருந்துகமழத்தக்கது. நூற்குமுன்னும் பின்னும் பல விசேடக்குறிப்புக்கள் அமைந்தது. இத்தமிழ்ச்சங்கத்தின் இரண்டாம் பிரசுரமாவது. இதன் விலை ரூ $1\frac{1}{2}$.

3. ஐந்திணையைம்பது.

இது சங்கமருவிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. சங்கத்துச் சான்றோராகிய மாறன்பொறையனார் அருளிச்செய்தது. அறம்பொருளின்பமென உடனெண்ணப்பட்டமூன்றனுள் இன்பப்பகுதிக்குரிய இருத்தல், புணர்தல், ஊடல், பிரிதல், இரங்கல் என்னும் ஐவகையொழுக்கங்களையும் நன்கெடுத்து மொழிவது. மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் 'செந்தமிழ்' ப்பிரசுரங்களுள் முதலாவது இது. இதன்விலை அணா 3.

4. இனியது நாற்பது (உரை), கணநூல்.

இனியது நாற்பது பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்றாகும். பண்டைச் சான்றோராகிய பூதஞ் சேந்தனார் அருளிச்செய்தது. கணநூல் என்பது ஆசிரியர் அடியார்க்கு நல்லாராற் சிலப்பதிகாரவுரையில் எடுத்துக் காட்டப்பெற்ற பிரமாணநூல்களுள் ஒன்று. கணப்பயனைத் தெளிவாக எடுத்துரைக்கும் 30-கட்டளைக் கலித்துறைகளுடையது. ஒன்றாகக்கட்டப்பட்ட இவ்விருபுஸ்தகங்களின் விலை அணா 3.

5. புலவராற்றுப்படை.

மாறனலங்காரவுரையாசிரியர் திருமேனி-இரத்தின கவிராயர் வழித்தோன்றிய திருக்குருகூர்ச்சிறிய இரத்தின கவிராயர் இயற்றியது. 200-வருடங்கட்குமுன்பு விளங்கிய இரசைவடமலையப்ப வள்ளலை விஷயமாகக்கொண்டது. சொற்சுவை பொருட்சுவை பெரிதுடைத்தாய்ப் படிப்போர்க்குப் பேரானந்தம் பயப்பது. விலை அணா 3.

6. நேமிநாதமூலமும் உரையும்.

குணவீரபண்டிதரால் மிகவழகான வெண்பாயாப்பில் இயற்றப்பட்டதோர் இலக்கணநூல். எழுத்ததிகாரம், சொல்லதிகாரமென்னும் இருபிரிவுகளுடையது. இந்நூல், பழையவுரையுடன் பல பிரதிகளைக்கொண்டு ஆராய்ந்து வெளியிடப்பெற்றது. இலக்கணப்பயிற்சி விரும்புவோர்க்குப் பெரிதும் உபயோகமாவது. கையிருப்பிற் சொற்பப்பிரதிகளே உள்ளன. விலை அணா 10.

7. திருநூற்றந்தாதி (உரையுடன்).

அவிரோதிநாதரென்னும் ஜைநமுனிவராலியற்றப்பட்ட இந்நூல் உரையோடும் பல பிரதிகளைக்கொண்டு வெளியிடப்பெற்றது. மிக அழகான கட்டளைக் கலித்துறைகளால் ஜைநசமயத்தின் உள்ளீடுகளை நன்குவிளக்குவது. ஜைநர்களாற் பெரிதும் போற்றப்படுவது. விலை அணா 4.

8. பன்னிருபாட்டியல்.

இது சங்கத்துச் சான்றோர்பலர் இயற்றியபாட்டியல்களினின்றும் முற்காலத்தே தொகுக்கப்பெற்ற சிறந்தநூல். எழுத்தியல், சொல்லியல், இனவியல் என்னு மூன்று பகுப்புடையது. இனிய சூத்திரங்களால், ஏனைய பாட்டியல்களினும் தெளிவாகவும் அழகாகவும் விஷயங்களை எடுத்துரைப்பது. இதன் விலை அணா-4.

9. அநுமானவிளக்கம்.

மணிமேகலையிலுள்ள "தவத்திறம்பூண்டு தருமங்கேட்ட காதை" யிலுள்ள அரியபெரிய தருக்கநுண்பொருள்களைப்பலருமறிந்து மகிழ்தற்கநுகூலமாகப் பலவரையறைக்குறிப்புக்களுடன் முயன்றெழுதப்பட்டது. நந்தமிழ்நாட்டிற் சீத்தலைச்சாத்தனார் காலத்து வழங்கிவந்த தருக்கமுறை இத்தன்மைத்தென்பது இதுகொண்டு யாவருநன்கறியலாகும். இஃது இச்சங்கத்துக் கலாசாலைத்தலைமைத் தமிழ் உபாத்தியாயர் ப்ரும்மஸ்ரீ திரு. நாராயணையங்காரவர்கள் இயற்றியது. விலை அணா- 4.

10. அட்டாங்க யோகக்குறள்.

இஃது அட்டாங்க யோகங்களினியல்பை விளங்கவெடுத்துரைக்கும் 60 குறள்களுடையது. இதனுடன் குறள்வெண்பாவானமைந்த 'வருத்தமறவுய்யும்வழி' என்னுஞ் சிறுநூலுஞ்சேர்ந்துள்ளது. விலை அணா 1.

11. மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் புலவராற்றுப்படை.

நாகூர் 'தர்கா' வித்துவான் வா. குலாம்காதிறு நாவலரவர்கள் உரையுடன் இயற்றியது. மதுரைத்தமிழ்ச்சங்கத்தை விஷயமாகக் கொண்டது. சொற்பொருணயங்கள் நன்கு வாய்ந்தது. இச்சங்கத்தின் இரண்டாம்வருஷோற்சவகாலத்து வித்துவக்கழகத்தின் முன்பு அரங்கேற்றப்பெற்றது. விலை அணா 4.

செந்தமிழ்.

இப்பெயர்கொண்ட பத்திரிகை, **மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்றும்,** மாதந்தோறும் வெளிவருகின்றது. இது, பெரும்பான்மையும் தமிழிலக்கிய, இலக்கணவிஷயங்களும், இதுகாறும் அச்சிடப்படாத செந்தமிழ் நூல்களும், தமிழ்நாட்டுப்புராதன சரிதங்களும் சாஸனங்களும், வடமொழியினும் ஆங்கிலத்தினுந் தமிழிற்குவேண்டுவனவாகக் கருதப்படும் நூன் மொழி பெயர்ப்புக்களுப், ஒன்றையொன்றிகழாச் சமயக்கொள்கைகளும், தமிழின் அருமை பெருமையடங்கிய விஷயங்களும், தமிழ் வளர்ச்சிக்கு வேண்டுவன பிறவும் கொண்டு நடைபெறுகின்றது. இப்பத்திரிகை மூலம் வெளிவரும் செந்தமிழ் நூல்கள், தனித்தனி புத்தகங்களாதற்குரிய நிலையில் அச்சிடலாகும். பெரும்பான்மை இச்சங்கத்து வித்துவான்களும் மற்றும்வித்துவான்களும் இதற்கு விஷயதானம்புரிவோராவர். இச் 'செந்தமிழ்' ப்பத்திரிகை அதிகப் பொருட்செலவிற் பிரசுரிக்கப்படினும் செந்தமிழ் அபிவிர்த்தி ஒன்றே கருதி எளியவிலைக்கு அமைக்கப்பெற்றுள்ளது. இப்பத்திரிகையின் வருடச்சந்தாத் தொகை ரூ 4—0—0.

☞ மேலேகாட்டிய புத்தகங்கட்கு தபால் சார்ஜ் பிரத்தியேகம். ஷை புத்தகங்களும், பத்திரிகையும் **மதுரைத்தமிழ்ச் சங்கம் மானேஜர்** அவர்கட்கெழுதி வி. பி. பி. மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

மதுரைத் தமிழ்ச்சங்கப் பதிப்பிற்குச் சங்க அங்கத்தினர் செலுத்த வேண்டிய வருட 'சந்தா'த் தொகையை அன்புற்றனுப்பிய வித்வான்கள்.

---

1. மகாா-ா-ஸ்ரீ டி. இராமலிங்கம் அவர்கள், பீ. ஏ; கோயம்புத்தூர்.
2. ,, பி. குருராவ் அவர்கள், M.A. L.T. எஸ். பி. ஜி. காலேஜ், திருசிரபுரம்.
3. ,, வா. குலாம்காதிறு நாவலரவர்கள், நாகூர்.
4. ,, ப. நாராயணையரவர்கள், B. A, B. L; ஹைகோர்ட் வக்கீல், மதுரை.
5. ,, கே. சுந்தரராமஐயரவர்கள், M. A. கவர்ன்மெண்ட் காலேஜ், கும்பகோணம்.
6 ,, எஸ். இராதாகிருஷ்ணையரவர்கள், B. A. பிரன்சிபால், மகாராஜாகாலேஜ், புதுக்கோட்டை.
7. ,, பி. எஸ். சுப்பிரமணியஐயரவர்கள், மதுரை.
8. ,, எஸ். சாமிநாதையரவர்கள், மதுரை,
9. ,, அஷ்டாவதானம் பூவை. கல்லியாணசுந்தரமுதலியாரவர்கள், சென்னை.
10. ,, பிர்ம்மஸ்ரீ சங்கரசுப்பாசாஸ்திரிகள், வேப்பற்றூர் மடத்துச் சின்னசுவாமிகள், ஆகமவித்துவான், திருநெல்வேலி.
11 ,, தண்டலம்-பாலசுந்தரமுதலியாரவர்கள். தமிழ்டிரான்ஸ்லேட்டர் ஆபீஸ், சென்னை.
12. ,, எம்.எஸ்.சுப்பிரமணியகவிராயரவர்கள், தமிழ்ப்பண்டிதர் இந்துகாலேஜ், திருநெல்வேலி.
13. ,, வி. பி. சுப்பிரமணியமுதலியாரவர்கள், ஸீனியர் வெட்டர்னரி அஸிஸ்டன்ட், பூவிருந்தவல்லி.
14. ,, வி. குப்புசாமிராஜூ அவர்கள், தஞ்சை.
15. ,. டி. கனகசுந்தரம்பிள்ளையவர்கள், செக்கிரிடரியட், போர்ட்செண்ற்ஜார்ஜ். சென்னை.
16. ,, ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்கள்; தமிழ் வித்துவான், தரங்கம்பாடி.
17. ,, ஆ. கா. பிச்சைஇபுறுகிம் புலவரவர்கள், வரகனேரி, திரிசிரபுரம்.
18. ,, எம். எஸ். பூர்ணலிங்கம்பிள்ளையவர்கள், செண்ற்மிக்கேல் காலேஜ், கோயம்புத்தூர்.
19. ,, பி. வேங்கடசாமிபிள்ளையவர்கள், B. A. உஸுார்சிரேஷ்டதார், திருநெல்வேலி.
20. ,, எஸ். பால்வண்ணமுதலியாரவர்கள், திருநெல்வேலி.
21. ,, வி. திருச்சிற்றம்பலம்பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர், செண்ற்மிக்கேல்காலேஜ், கோயம்புத்தூர்.
22. ,, சிற். கைலாசபிள்ளையவர்கள், கொழும்பு.
23. ,, வி. கனகசபைப்பிள்ளையவர்கள், போஸ்டல்சூபரின்டன்டன்ட், சென்னை.

உ

விளம்பரம்.

ஒருமுறை பாருங்கள்.

மதுரை கீழமார்க்கட்டுத்தெருவில் நம்முடைய ஜவுளிமாளிகையில் கொற்நாடு, கும்பகோணம், தஞ்சாவூர், ஆரணி, சேலம் காஞ்சீபுரம், பனாபசு, உள்ளூர் முதலிய தினுசுகளும் பங்காளத்திலிருந்து பலவிதமானநார்ப்பட்டு, வெண்பட்டுதினுசுகளும்; நூதனமாய் அச்சிடப்பட்ட புதுச்சேரித்துண்டுகளும்; பற்பல உபயோகமுள்ள நாகரீக ஜவுளிதினுசுகளும்; மொத்தமாகவும் சில்லறையாகவும் கரூர்விலையாக விற்கப்படும். துலை வியாபாரிகளுக்கு ஜவுளி தினுசுகள் வேண்டிய மாதிரியில் உடனேயும் பத்திரமாயும் தபால் வாலியூபேயபிள் மார்க்கமாய் அனுப்பப்படும். சாமான்களின் ஜாப்தா கேட்பவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும்.

கு. தெய்வசிகாமணி பாகவதர்,

டி. லட்சுமண பாகவதர்,

கரூர் ஜவுளிக்கடை மதுரை.

☞ தயவு செய்து தங்களுடைய சிநேகிதர்களுக்கு தெரிவியுங்கள்.